International Labour Organization

# துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கான கண்ணியமான தொழில் மீதான தெற்காசிய உப பிராந்திய செயலமர்வு (மெய்நிகர்)

*2021 ஒக்டோபர் 11 – 13*

கலந்துரையாடல்களின் அறிக்கை (இறுதி)



# உள்ளடக்கங்களின் அட்டவணை


அறிமுகம்.....1

செயலமர்வின் நோக்கெல்லையும் இலக்கும் .....1

நாள் 1: 2021 ஒக்டோபர் 11 .....2

ஆரம்பக் கூட்டத்தொடர்.....2

பின்னனிக் குறிப்பைச் சமர்ப்பித்தல் .....3

கருப்பொருள் வினா: சவாலுக்கு முகங்கொடுத்தல் .....4

துப்பரவேற்பாட்டுத் தொழிலார்கள் முகங்கொடுக்கும் பிரதான இடர்கள், அவ்வாறான இடர்களை நிவர்த்திசெய்வதில் கலந்துகொள்வோர் முகங்கொடுக்கும் பிரதான சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்கள், மற்றும் துப்பரவேற்பாட்டுத் தொழிலார்கள் தொடர்பான அறிவிலுள்ள இடைவெளி போன்றவை யாவை?.....4

குழுக் கலந்துரையாடல்: துப்பரவேற்பாட்டுத் தொழிலார்களுக்கான முன்னெடுப்பு......4

அந்த முன்னெடுப்புகள் எவ்வாறு சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனத்தின் பகுதிகளுக்கு நன்மை பயக்கிறது மற்றும் சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனத்தின் பகுதிகள் எவ்வாறு அம்முன்னெடுப்புகளின் வேலைக்கு ஒத்துழைப்பு வழங்குகிறது?.....5

தேசிய கலந்துரையாடல்களின் சுருக்கம்.....6

இந்தியா.....6

பங்களாதேஸ்.....7

நேபாளம்.....7

பாகிஸ்தான் .....

மாலைதீவு.....8

கலந்துரையாடல்.....

கொண்டுசெல்வதற்கான குறிப்புகள்.....9

நாள் 2: 2021 ஒக்டோபர் 12 .....10

குழுக் கலந்துரையாடல்: சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனத்தின் அனுபவங்கள்: சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனம் கற்றுக்கொண்ட தொடர்புபட்டதும் பயனுள்ளதுமான அனுபவங்கள் யாவை?.....10

கருப்பொருள் வினா: சிறந்த நடைமுறைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்......11

இவ்வாறான இடர்களையும் சவால்களையும் நிவர்த்திசெய்வதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை அரசாங்கங்களும் சமூகப் பங்காளர்களும் எடுத்துள்ளன?.....11

தேசிய கலந்துரையாடல்களின் சுருக்கம் .....11

இந்தியா.....12

பங்களாதேஸ்.....12

நேபாளம்.....12

பாகிஸ்தான் .....12

மாலைதீவு.....12

கலந்துரையாடல்.....13

கொண்டுசெல்வதற்கான குறிப்புகள்.....13

நாள் 3: 2021 ஒக்டோபர் 13 .....14

கருப்பொருள் வினா: எதிர்காலத் திட்டத்தை வகுத்தல்::.....14

இத்துறையிலுள்ள வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் இவ்வாறான சவால்களை நிவர்த்திசெய்வதற்கும் சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனம், அரசாங்கங்கள் மற்றும் சமூக பங்காளர்கள் ஆகியோர் கடைப்பிடிக்கக்கூடிய மூலோபாயங்கள் யாவை? ..... 14

திறந்த கலந்துரையாடல் ..... 14

தேசிய கலந்துரையாடல்களின் சுருக்கம் .....

இந்தியா ..... 14

பங்களாதேஸ் ..... 14

நேபாளம் ..... 14

பாகிஸ்தான் ..... 15

மாலைதீவு ..... 15

வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் இந்த உப பிராந்தியத்தில் துப்பரவேற்பாட்டுத் தொழிலார்கள் முகங்கொடுக்கும் சவால்களை நிவர்த்திசெய்வதற்குமான மூலோபாயங்கள். ..... 16

முடிவுக் கூற்று ..... 17

பின்னிணைப்பு 1: உறுதிப்படுத்தப்பட்ட கொண்டுசெல்வதற்கான குறிப்புகள் ..... 18

பின்னிணைப்பு 2: கலந்துகொண்டோரின் பட்டியல் ..... 210

## அறிமுகம்

கண்ணியமான தொழில் சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்கள், அவற்றை நிவர்த்திசெய்வதற்காக அரசாங்கங்களாலும் சமூகப் பங்காளர்களாலும் எடுக்கப்படும் நடவடிக்கைகளை கலந்துரையாடுவதற்கும் அதேபோன்று துப்பரவேற்பாட்டுத் துறையில் சந்தர்ப்பங்களை உருவாக்குவதற்கும் கண்ணியமான தொழில் குறைகளை நிவர்த்திசெய்வதற்குமாக சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனம், அரசாங்கங்கள் மற்றும் சமூகப் பங்காளர்களால் கடைப்பிடிக்கக்கூடிய மூலோபாயங்களை உருவாக்குவதற்கும் பங்களாதேஸ், மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான், மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து அரசாங்கங்கள், தொழில் வழங்குனர்கள் மற்றும் தொழிலாளர்களின் அமைப்புகளிலிருந்து பிரதிநிதிகளை இச்செயலமர்வு ஒன்றுகூட்டியது. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கான முன்னெடுப்புகளின் பகுதியொன்றாக சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட *துப்பரவேற்பாட்டுத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் கண்ணியத்துக்கான பூகோள ஆதரவு* மீதான செயற்பாடுகளின் தொடரின் பகுதியாக இச்செயலமர்வு காணப்பட்டது.

ஏனைய நாடுகளிலிருந்து கலந்துகொண்டவர்களால் கலந்துரையாடுவதற்காக குழுவில் சமர்ப்பிப்பதற்கான சுருக்கக் குறிப்பை வரைவதற்கு முன் கலந்துகொண்டவர்களால் தேசிய குழுக் கலந்துரையாடல்களில் கலந்துரையாடப்பட்ட மூன்று கருப்பொருள் சார்ந்ததாக இச்செயலமர்வு ஒழுங்குசெய்யப்பட்டது. சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனம், அரசாங்கங்கள் மற்றும் சமூகப் பங்காளர்களுக்கான நிலையான செயற்படுத்தக்கூடிய விதப்புரைகளை உருவாக்குவதற்காக இந்தக் குழுக் கலந்துடையாடல்கள் பயன்படுத்தப்பட்டன.

### செயலமர்வின் நோக்கெல்லையும் இலக்கும்

துப்பரவேற்பாட்டுத் தொழிலார்களின் தொழில் நிலைமைகள் மற்றும் அவர்களின் சமூகத் தொடர்பாடலை முன்னேற்றுவது தொடர்பான தேசிய அல்லது உப பிராந்திய கொள்கையை அல்லது உபாயத்தை நோக்கிய தொழில் உலகின் பங்குதாரர்களை ஒருங்கிணைப்பதற்கான கூட்டு நடவடிக்கைக்கான எண்ணங்களை உருவாக்குவதும் ஒருங்கிணைப்பைப் பலப்படுத்துவதும் இந்த திறன் விருத்தி செயலமர்வின் நோக்கமாகும்.

இச்செயலமர்வில், ‘‘துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள்’’ என்போர் மலசலகூடங்களை துப்பரவு செய்வதற்கும், தொட்டிகளை அல்லது குழிகளை வெறுமையாக்குவதற்கும், வடிகான்கள் மற்றும் சாக்கடைப் புழைகல் போன்றவற்றை துப்பரவு செய்வதற்கும் மற்றும் மலக்கழிவுப் பதார்த்தங்களை ஏற்றிச்செல்வதற்கும் கழிவகற்றல் மற்றும் வடிகான் சுத்திகரிப்புத் தளங்களில் தொழில்புரிவதற்குமாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்கள் ஆவர். இவ்விடயம் தொடர்பாக பின்னணிக்குறிப்பொன்றை சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனம் பிரசுரித்தது.

## நாள் 1: 2021 ஒக்டோபர் 11

### ஆரம்பக் கூட்டத்தொடர்

ஜெனீவாவிலுள்ள சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனத்தின் துறைசார் கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி அலீட் வேன் லியுர் கலந்துகொண்டோரை வரவேற்றதுடன் சமூகத்தில் அத்தியாவசிய பொதுச் சேவைகளை வழங்குவதில் துப்பரவேற்பாட்டுத் தொழிலார்களின் முக்கிய பாத்திரத்தை வலியுறுத்தினார். ஆனால், காயங்கள், உயிரிழப்புகள், இழுக்கு, பாகுபாடு மற்றும் முற்றுமுழுதான போதுமற்றதும் பாதுகாப்பற்றதுமான தொழில் நிலைமைகள் உள்ளடங்கலான பன்மடங்கு கண்ணியமான தொழில் சவால்களுக்கு அவர்கள் முகங்கொடுக்கின்றனர். துப்பரவேற்பாட்டுத் தொழிலார்களின் எப்போதும் வருந்தத்தக்க நிலைமை தொடர்பாகக் கவனத்தை செலுத்த வேண்டும் என சமூக பங்காளர்களிடம் அவர் கோரிக்கை விடுத்ததுடன் இத்துறையில் கண்ணியமான தொழிலை ஊக்கப்படுத்துவதற்கு உறுதியான முயற்சிகளுக்கும் அழைப்பு விடுத்தார். தொழிற் சந்தையில் முன்பிருந்த இயக்கத்தை கோவிட் - 19 உலகத்தொற்றுநோய் வெளிக்கொண்டுவந்ததுடன் கோவிட் - 19 உலகத்தொற்றுநோயுடன் தொடர்புபட்ட சவால்களை சிறந்த முறையில் அறிந்து அதற்கு வினைத்திறனான முறையில் பதிலளிப்பதற்கு தமது பங்காளர்களுடன் சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனம் பணியாற்றியது. அண்மைய காலங்களில் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் பன்மடங்கு சவால்களை நீண்ட காலமாக கவனிப்பாரற்றுக் கிடந்த கவனத்தை ஈர்க்கத் தொடங்கியதாகவும் 2019 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பு, உலக வங்கி, வோட்டர் எயிட் மற்றும் SNV ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொண்ட ஆரம்பகட்ட மதிப்பீட்டில் கலந்துகொண்டதையிட்டு சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனம் பெருமையடைந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

சமூகங்களுக்கான அத்தியாவசிய பொதுச்சேவைகள் மீதான துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் பங்களிப்பை சர்வதேச தொழிலாளர் இஸ்தாபன DWT - புது டில்லியின் பணிப்பாளர் திருமதி டக்மார் வோல்டெர் இனங்கண்டுகொண்டார். துப்பரவேற்பாட்டுச் சேவை சங்கிலியின் பராமரிப்பை அவர்களுடைய பாத்திரம் உறுதிசெய்தது. ஆனால் அநேகமானோருக்கு, தெற்காசிய சூழ்நிலையைப் பொறுத்தவரையில், எவ்விதமான உரிய உபகரணங்களோ பாதுகாப்பு அங்கிகளோ இன்றி பாரதூரமான காயங்கள் மற்றும் உயிரிழப்புக்கும் இட்டுச்செல்லக்கூடிய ஆபத்துகளை எதிர்கொண்டு அவர்களுடைய வேலையைச் செய்யும் இடருக்கு மத்தியில் இது இடம்பெற்றது. மேலும், துப்பரவேற்பாட்டுத் தொழிலைச் சுற்றியுள்ள சமூக இழுக்கு புறக்கணிக்கப்படமுடியாத விடயமொன்றாகும். அவர்களுடைய சேவைகள் அத்தியாவசியமானதாகவும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDGs) 6 மற்றும் 8 இன் பாரிய இலக்குகளுக்கு பங்களிப்பை வழங்குவதாக இருப்பினும், இப்பிராந்தியத்தில் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் நலன் தொடர்பான கவலை தரும் கருத்துக்கள் நிலவுகின்றன.

தெற்காசிய நாடுகளின் தொழில் மற்றும் ஊழியப்படை அளவுகளின் தரவுகளில் பிரதிபலித்தது போன்று, பிரதானமாக அவர்களுடைய தொழிலின் முறைசாராத் தன்மை காரணமாக துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் உயர் அளவிலான பொருளாதாரப் பாதுகாப்பின்மைக்கு முகம்கொடுத்தனர். அநேகமான துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் எவ்விதமான சமூகப் பாதுகாப்பு திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை. அநேகமான தெற்காசிய நாடுகளின் அரசாங்கங்கள் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் பிரச்சனைகளை இனங்கண்டிருந்ததுடன் அவர்கள் அனுபவித்த சுகாதார ஆபத்து மற்றும் இழுக்கு போன்றவற்றுக்கெதிரான பாதுகாப்பை வழங்குவதற்கான சட்டங்களையும் கொள்கைகளையும் இயற்றியுள்ளன. அநேகமான தெற்காசிய நாடுகள் உடல் உழைப்பால் மேற்கொள்ளப்படும் உளர் மலசலகூடத் துப்பரவு, குழி வெறுமையாக்கல், வடிகான் துப்பரவு மற்றும் ஏனைய தொடர்புடைய வேலைகளை சட்டரீதியாகவும் நிர்வாகரீதியாகவும் தடைசெய்திருந்தும் உடல் உழைப்பால் மேற்கொள்ளப்படும் துப்பரவு நடைமுறை காணப்படுகிறது. இந்தியாவில், திறந்த மலசலக் கழிவகற்றல் அற்ற, சுத்தமான, மற்றும் துப்பரவான இந்தியாவை உருவாக்கும் நோக்கில் சுவச் பாரத் தூரநோக்கை அரசாங்கம் ஆரம்பித்தது. உடலுழைப்பு துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் புனர்வாழ்வளிப்பு சமூகப் பாதுகாப்பு மற்றும் வருமானம் மீது செயற்படுவதற்கான ஆணையை சமூக நீதி மற்றும் வலுவூட்டல் அமைச்சு கொண்டிருந்தது. அதேபோன்று, அநேகமான தெற்காசிய நாடுகளில் சட்டக் கட்டமைப்புகள் காணப்பட்டன.

தற்போதுள்ள பாதகமான உடலுழைப்பு துப்பரவேற்பாட்டுத் தொழிலுக்கான பின்னணியிலுள்ள காரணங்களை விளங்குவது சவாலாகக் காணப்பட்டது. உழைப்பு முறைகளை மாற்றியமைப்பதற்கும் மற்றும் ஆபத்தானதும் துப்பரவற்றதுமான தொழில் நிலைமைகளை இல்லாதொழிப்பதற்குமான உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தேவையொன்று காணப்பட்டது. இயந்திர முறைகளுக்கு மாறுதல் தொடர்பான கவனத்தை மட்டும் செலுத்துவதற்குப் பதிலாக துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் உயிர்கள் மற்றும் வருமானங்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு

பாதுகாப்பானதும் ஆரோக்கியமானதுமான தொழில்புரியும் நிலைமைகளை வழங்குவதும் முன்னுரிமையாகக் காணப்படுதல் வேண்டும்.

மக்களுடைய செயல் வல்லமைகளில் முதலீட்டை அதிகரித்தல், தொழில் நிறுவனங்களில் முதலீட்டை அதிகரித்தல் மற்றும் கண்ணியமானதும் நிலைபேறானதுமான தொழிலில் முதலீட்டை அதிகரித்தல் போன்றவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் *மனித மைய்ய மீட்சிக்கான நடவடிக்கைகளுக்கான பூகோள அழைப்பு* மற்றும் *தொழிலின் எதிர்காலத்துக்கான சர்வதேச தொழிலாளர் இஸ்தாபன நூற்றாண்டுப் பிரகடனம்* போன்றவற்றால் கலந்துகொண்டோர் ஊக்கமளிக்கப்படுவர் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

## பின்னனிக் குறிப்பைச் சமர்ப்பித்தல்

கண்ணியமான தொழில் வில்லைகளூடாக தெற்காசியாவிலுள்ள (ஆப்கானிஸ்தான், பங்களாதேஸ், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை) துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் நிலைமைகளை பின்னனிக் குறிப்பு பரிசீலனை செய்தது. தொற்றுப்பதார்த்தக் குழிகள் மற்றும் தொட்டிகளை வெறுமையாக்குகின்ற, மலக் கழிவுகளை கொண்டுசெல்வதற்கான வசதிகளை வழங்குகின்ற, வடிகான் பராமரிப்பை மேற்கொள்ளுகின்ற, மற்றும் சுத்திகரிப்பு நிலையங்களில் தொழில்புரிகின்றவர்களை உள்ளடக்குவதற்கு இப்பத்திரம் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களை வரையறை செய்தது. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கான கண்ணியமான தொழிலுக்கான பிரதான சவால்களை நிவர்த்திசெய்வதற்கான அடிப்படையொன்றை வழங்கக்கூடிய தொடர்புடைய சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனக் கருவிகளின் சுருக்கத்தையும் அது உள்ளடக்கியிருந்தது.

மொத்த தொழிலாளர்களுடன் ஒப்பிடுகையில் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் சிறிய சதவீதத்தினராகக் காணப்பட்டதாக இப்பத்திரம் கண்டறிந்தது. சில நாடுகளில், ஏனைய நாடுகளை விட 60 வயதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உடலுழைப்பு துப்பரவேற்பாட்டு தொழிலில் ஈடுபடுவோராகக் காணப்பட்ட அதே வேளை அந்தந்த நாடுகளில் பெண்களின் பங்கேற்பு வித்தியாசமாகக் காணப்பட்டது.

குறைந்த கொடுப்பனவு மற்றும் சுரண்டலுக்கு உட்படுகின்ற முறைசாரா துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களை விட மூன்று மடங்கு அதிக ஊதியங்கள் வரை முறைசார் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் பெறுகின்றனர். தனிநபர் பாதுகாப்பு அங்கிகளை விலைகொடுத்து வாங்கமுடியாத நிலைமை அல்லது அசௌகரியம் அல்லது தனிநபர் பாதுகாப்பு அங்கிகளை அணிவதன் நன்மைகள் தொடர்பான விழிப்பூட்டல் இல்லாததனால் குழி வெறுமையாக்குபவர்கள் மத்தியில் தனிநபர் பாதுகாப்பு அங்கிகளை அணிவது பொதுவான விடயமொன்றல்லாததாகக் காணப்பட்டது. அதன் காரணமாக, உடல் உழைப்பால் வெறுமையாக்குகின்றவர்களுக்கு மனித மலங்கள் அதேபோன்று துப்பரவுப் பொருட்கள், கூரான பொருட்கள் மற்றும் தின்மக் கழிவுகள் உள்ளிட்ட கழிப்பிடக் குழிகளில் காணப்படும் ஏனைய பொருட்களின் நேரடித்தொடர்பு அடிக்கடி ஏற்பட்டு காயங்கள் மற்றும் சுகயீனம், வெட்டுகள் மற்றும் உராய்வு காரணமான தொற்று மற்றும் மலசலம் மூலம் பரவும் ஒட்டுண்ணிகள் மற்றும் காவிகள் மூலம் பரவும் தொற்றுநோய், தோல் ஒழுங்கின்மை மற்றும் சுவாச நோய்கள் போன்றவற்றுக்கும் இட்டுச்செல்கிறது.

பொதுத்துறையாக இருக்கலாம் அல்லது தனியார் துறையாக இருக்கலாம், தொழிலாளர்களுக்கு எவ்வித தொழில் ஒப்பந்தங்களோ அல்லது சமூகப் பாதுகாப்போ இன்றி துப்பரவேற்பாட்டுத் தொழில் முறைசாராததாக விபரிக்கப்படுகிறது. அதிகமான துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் அரச துறையை விட தனியார் துறையில் காணாப்பட்டனர், இருந்தும், அரச துறைத் தொழிலாளர்கள் கூட சமூகப் பாதுகாப்பின்றிக் காணப்படுகின்றனர்.

துப்பரவேற்பாட்டுத் தொழிலிலிருந்து மாற்றுத் தொழில்களுக்கு மாறுவதற்கு கீழ் சாதி துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் வழமையாக எதிர்க்கப்பட்ட போதும் மேல் சாதியின் உறுப்பினர்கள், உதாரணமாக, தேயிலைக் கடையொன்றை ஆரம்பித்தல் அல்லது முச்சக்கர வண்டி ஓட்டுதல் போன்ற அவர்களுடைய முயற்சிகளை பகிஸ்கரித்தனர். துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் குடிப்பதற்காக நீரைக் கேட்கின்ற சந்தர்ப்பங்களில் சில குடும்பங்கள் தர மறுத்தல் மற்றும் அவர்கள் பணத்தை செலுத்துகின்ற போது அவர்களைத் தொடுவதிலிருந்து தவிர்ந்து கொள்வதற்காக அவற்றை நிலத்தில் போடுதல் போன்றவை உள்ளிட்ட அவமானப்படுத்தும் வகையிலான கவனிப்புகள் தொடர்பாக சுய-தொழில் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் குறிப்பிட்டனர். துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கெதிரான பாகுபாடு பகுதியளவில் கலாசார மற்றும் சமய எண்ணங்களின் விளைவொன்றாகக் காணப்பட்டது. அதிகளவான துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் நாடொன்றின் பெரும்பான்மை சமய சமூகத்திலிருந்து வருகின்றனர், உதாரணமாக, இந்தியாவில் இந்துக்கள், பங்களாதேஸ் மற்றும் ஆப்கானிஸ்தானில் முஸ்லிம்கள் மற்றும் இலங்கையில் பௌத்தர்கள். சாதி-இனத் தொடர்பு சில நாடுகளில் பொதுவாகக் காணப்பட்டது: உதாரணமாக, சீக்கிய சமயம், பௌத்தம் மற்றும் கிறிஸ்தவம் போன்ற ஏனைய சமயங்களுக்கு மாறிய கடந்த தீண்டத்தகாதவர்கள் மற்றும் முன்னாள் தீண்டத்தகாதவர்கள் இந்தியா, நேபாளம், இலங்கை மற்றும் பங்களாதேஸ் ஆகிய நாடுகளில்

குறிப்பிடத்தக்க துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களை உள்ளடக்கியிருந்தனர். கல்வி மட்டங்களால் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் பரம்பலில் பரந்த வித்தியாசமும் காணப்படுகிறது.

இப்பிராந்தியத்திலுள்ள அதிகளவான நாடுகள் சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனத்தின் எட்டு அடிப்படைச் சமவாயங்களுக்கு ஒப்புதலளித்திருந்த அதேவேளை ஏனையோர் இச்செயலமர்வுடன் தொடர்புபட்ட ஏனைய சமவாயங்களுக்கு ஒப்புதலளித்திருக்கவில்லை ஆனால் பொதுப் பிரயோக சட்டங்களை இயற்றியிருந்தனர். துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் மீதான கவனக்குறைபாடு சவாலொன்றாகக் காணப்பட்டது.

இந்தியா 1948 ஆம் ஆண்டு (இல. 87) கூடுவதற்கான சுதந்திரம் மற்றும் ஒழுங்கமைப்பதற்கான உரிமையின் பாதுகாப்புச் சமவாயம் மற்றும் 1949 ஆம் ஆண்டு (இல. 98) ஒழுங்கமைப்பதற்கான உரிமை மற்றும் பொதுக்கூட்டுப்பேரச் சமவாயம் தொடர்புடைய சட்டத்துக்கு ஒப்புதலளிக்கவுமில்லை சட்டத்தை இயற்றவுமில்லை. வலுக்கட்டாயமான உழைப்பு, கூடுவதற்கான சுதந்திரம் மற்றும் ஒழுங்கமைப்பதற்கான உரிமை தொடர்பான சட்டங்களை இயற்றியிருந்தும் 1930 ஆம் ஆண்டு (இல. 29) வலுக்கட்டாயமான உழைப்பு சமவாயம், 1948 ஆம் ஆண்டு (இல. 87) கூடுவதற்கான சுதந்திரம் மற்றும் ஒழுங்கமைப்பதற்கான உரிமையின் பாதுகாப்புச் சமவாயம் மற்றும் 1949 ஆம் ஆண்டு (இல. 98) ஒழுங்கமைப்பதற்கான உரிமை மற்றும் பொதுக்கூட்டுப்பேரச் சமவாயம் போன்றவற்றுக்கு ஒப்புதல் அளித்திருக்கவில்லை. பங்களாதேஸ் குறைந்த பட்ச ஊதியம் தொடர்பான சட்டத்தை இயற்றியிருந்த போதும், 1973 ஆம் ஆண்டு (இல. 138) குறைந்த பட்ச வயது சமவாயத்துக்கு ஒப்புதலிக்காதிருந்தும் மிக மோசமான சிறுவர் உழைப்பு சமவாயத்துக்கு ஒப்புதலளித்திருந்தும் அதனை உள்நாட்டில் உருவாக்கியிருக்கவில்லை. மாலைதீவு 1948 ஆம் ஆண்டு (இல. 87) கூடுவதற்கான சுதந்திரம் மற்றும் ஒழுங்கமைப்பதற்கான உரிமையின் பாதுகாப்புச் சமவாயம் மற்றும் 1949 ஆம் ஆண்டு (இல. 98) ஒழுங்கமைப்பதற்கான உரிமை மற்றும் பொதுக்கூட்டுப்பேரச் சமவாயம் போன்றவற்றை உள்நாட்டில் உருவாக்கியிருக்கவில்லை. நேபாளம் 1948 ஆம் ஆண்டு (இல. 87) கூடுவதற்கான சுதந்திரம் மற்றும் ஒழுங்கமைப்பதற்கான உரிமையின் பாதுகாப்புச் சமவாயத்துக்கு ஒப்புதல் அளித்திருக்கவில்லை.

### கருப்பொருள் வினா: சவாலுக்கு முகங்கொடுத்தல்

துப்பரவேற்பாட்டுத் தொழிலார்கள் முகங்கொடுக்கும் பிரதான இடர்கள், அவ்வாறான இடர்களை நிவர்த்திசெய்வதில் கலந்துகொள்வோர் முகங்கொடுக்கும் பிரதான சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்கள், மற்றும் துப்பரவேற்பாட்டுத் தொழிலார்கள் தொடர்பான அறிவிலுள்ள இடைவெளி போன்றன யாவை?

### குழுக் கலந்துரையாடல்: துப்பரவேற்பாட்டுத் தொழிலார்களுக்கான முன்னெடுப்பு.

சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனம், உலக சுகாதார அமைப்பு, உலக வங்கி, மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களான வோட்டர் எயிட் மற்றும் SNV ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புப் பணி மீதான சமர்ப்பணத்தை துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கான முன்னெடுப்பின் பிரதான தொழில்நுட்ப ஆலோசகர் மேற்கொண்டார். மூன்று குறிக்கோள்களுடன் *துப்பரவேற்பாட்டிலுள்ள தொழிலாளர்களின் சுகாதாரம், பாதுகாப்பு, மரியாதை போன்றவற்றுக்கான பூகோள ஆதரவை* உயர்த்திய ஆரம்ப கட்ட கணிப்பீட்டை 2019 ஆம் ஆண்டில் இம்முன்னெடுப்பு நடாத்தப்பட்டது:

அ) அரசியல் முன்னுரிமைப்படுத்தல்: தேசிய மற்றும் உள்ளூர் மட்டங்களில் அரசாங்க மற்றும் சிவில் சமூக அரசியல் நிகழ்ச்சிநிரல்களில் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் உரிமைகளை உள்ளடக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

ஆ) WASH மற்றும் உழைப்புத் துறைகளை செல்வாக்குச் செலுத்துதல்: WASH துறை நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு நிகழ்ச்சிகள் மற்றும் உழைப்புத் துறை முன்னெடுப்புகளில் துப்பரவேற்பாபட்டுத் தொழிலாளர்களின் உரிமைகளை ஏற்றுக்கொள்ளச்செய்தல்.

இ) அறிவு இடைவெளியை நிவர்த்திசெய்தல்: அறிவு இடைவெளியை நிவர்த்திசெய்யும் ஆய்வு முன்னெடுப்புகள் மற்றும் உற்பத்திகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் மீதான சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனத்தின் செயலமர்வு தேசிய மற்றும் பூகோளக் கடமையுணர்ச்சி; துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் ஒழுங்கமைப்புகளை அல்லது வலையமைப்புகளை பலப்படுத்துதல்; நகர துப்பரவேற்பாட்டுக் கருத்திட்டங்களில் உலக வங்கி முதலீடு நிகழ்வுகளில் தகவல்களைப் பரப்புதல்; உள்ளடக்கங்களை உருவாக்குதலும் பரப்புதலும் முறைசாரா

துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுடனான ஈடுபாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்; ஆய்வு நிகழ்ச்சித்திட்டமொன்றை உருவாக்குதல்; ஆய்வை ஊக்குவித்தல்; நடைமுறைகள், வழிகாட்டல்கள், மற்றும் உள்ளூர் ஒழுங்குவிதிகள் போன்றவற்றின் மீளாய்வு; தொழில்நுட்பம் ரீதியான புத்தாக்கங்களின் மீளாய்வு; தரவுச் சேகரிப்பு சரிபார்த்தல் பட்டியல் அளவு மதிப்பீடு; மற்றும் சுகாதார சாட்சியம் மற்றும் இணையத் தளத்தை உருவாக்குதல் போன்றவற்றை உள்ளடக்கிய 14 செயற்பாடுகளை இம்முன்னெடுப்பு கொண்டிருந்தது. இச்செயற்பாடுகளின் நடைமுறைப்படுத்தலில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றம் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பான ஆய்வு நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்குதல் மற்றும் முதுமாணி மற்றும் கலாநிதி பட்டப்படிப்புகளில் ஆய்வை ஊக்குவித்தல் ஆகியன முன்னெடுப்புகள் மீதான முக்கிய இற்றைப்படுத்தல்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன. உதாரணமாக, தன்சானியா, கென்யா, சாம்பியா, புர்க்கினா பாசோ, இந்தியா, பங்களாதேஸ் மற்றும் நேபாளம் போன்ற நாடுகளிலுள்ள துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களால் உருவாக்கப்பட்ட ஒழுங்கமைப்புகள் (ஒன்றியங்கள், கூட்டுறவுகள், சங்கங்கள் போன்றன) மற்றும் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுடன் மிக நெருக்கமாக ஏற்கனவே பணிபுரிந்துகொண்டிருக்கும் ஒழுங்கமைப்புகள் ஆகியவற்றிடமிருந்து ஆர்வத்தைத் தெரிவிப்பதற்கான அழைப்பை இம்முன்னெடுப்பு மேற்கொண்டிருந்தது.

## அம்முன்னெடுப்புகள் எவ்வாறு சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனத்தின் பகுதிகளுக்கு நன்மை பயக்கிறது மற்றும் சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனத்தின் பகுதிகள் எவ்வாறு அம்முன்னெடுப்புகளின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகிறது?

தொழிலின் அடிப்படையில் இத்துறையின் அளவு தொடர்பாக அநேகமான நாடுகளில் உள்ளூர் அதிகாரசபைகள் எவ்வித அறிவையும் கொண்டிருக்கவில்லை என வோட்டர் எயிட் அவதானித்தது. இந்த அறிவு இடைவெளி எந்தளவு இத்துறையானது புறக்கணிக்கப்பட்டிருந்தது என்பதைப் பிரதிபலிப்பதாகக் காணப்பட்டது. தொழிலாளர்களுடைய கவலைகளை தொழில் வழங்குநர் புரிந்து கொள்ள அல்லது ஒழுங்கமைப்பதற்காக தொழிலாளர்களுக்கு உதவுவதற்கு மட்டுமல்லாது இத்துறைக்காக ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்குவிதிகள் அல்லது கொள்கைகளை உருவாக்குவதற்கும் உள்ளூர் அதிகாரசபைகளுக்கு உதவக்கூடிய அறிவு இடைவெளியை நிரப்புவதற்கு இம்முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. தொழிலாளர்களுடன் இணைந்து பணிபுரியும் உள்ளூராட்சி அதிகாரசபைகள் அந்தந்த தேசிய நிகழ்ச்சித்திட்டம் மீதான தலைப்புகளை பிரயோகிப்பதற்கான நிலையைக் கொண்டிருந்தன.

துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுடன் தொடர்புடைய சாட்சியம் மற்றும் ஆய்வின் களஞ்சியமொன்றாகச் செயற்படுவதற்கான இணையத்தளமொன்றை உலக வங்கி உருவாக்கிக்கொண்டிருந்தது. இத்தளம் கலந்துரையாடல் மன்றமொன்றாகவும் காணப்பட்டது. களஞ்சியமொன்றாக, துப்பரவேற்பாட்டுத் தொழில் பற்றிய பயனுள்ள தகவல்களை கொண்டுள்ள எவருக்கும் இத்தளத்திலே பதிவிடுவதற்கு திறந்ததாக இத்தளம் காணப்பட்டது. இக்களஞ்சியத்தில் உள்ளடக்குவதற்காக வெவ்வேறு பகுதிகளிலுமுள்ள சிறந்த நடைமுறைகள் மீதான வழிகாட்டல்களை உருவாக்குவதற்காக உலக வங்கி SNV உடன் இணைந்தும் செயற்பட்டுக்கொண்டிருந்தது. தொழில்சார் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் தொழிலாளர்களின் கௌரவம் தொழிலாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கான ஒழுங்குவிதிகள், வழிகாட்டல்கள் மற்றும் நடைமுறைகள் மற்றும் சுகாதார சாட்சியம் போன்றவற்றுடன் தொடர்புடைய தொழில்நுட்பப் புத்தாக்கங்களுடன் தொடர்புபட்டதாக ஏனைய முன்னெடுப்புகள் காணப்பட்டன.

துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் மீதான பாரிய தரவு இடைவெளி பற்றிய கருத்துக்களும் SNV இனால் பரிமாறப்பட்டன. வித்தியாசமான வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை இம்முன்னெடுப்பு தொகுத்ததுடன் அவ்வகையான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி குறைக்கக்கூடிய தொழில்சார் ஆபத்துக்களின் வித்தியாசமான வகைகளையும் இனங்கண்டது. ஒழுங்கமைப்பு மற்றும் கட்டமைப்பு தொடர்பாக, SNV கடந்த ஐந்து வருடங்களாக துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கான கூட்டங்களை நடாத்திவந்தது.

துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் தொடர்பாக அண்மையில் எழுப்பப்பட்ட விழிப்பூட்டல்களை குழுக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட சுய தொழிலில் ஈடுபடும் பெண்கள் சங்கத்தின் (SEWA) பிரதிநிதி வரவேற்றார். துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் கௌரவம் பற்றி பேசுகின்ற போது "சாக்கடைப் புழையில் மனிதனைப் பயன்படுத்துதல்" என்பதைச் சூழ உருவாக்கப்பட்ட விம்பம் மாற்றப்படவேண்டும். இந்த பாரிய தொழில்நுட்ப யுகத்தில் உடலுழைப்பால் மேற்கொள்ளப்படும் துப்பரவு அனுமதிக்கப்படக்கூடாது. காலநிலை மாற்றத் தணிவுக்கு மிகவும் முக்கியமான துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் ஊக்குவிப்புகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அற்ற பிரதானமாக ஒப்பந்தத் தொழிலாளர்களாகக் காணப்பட்டனர். உடலுழைப்பிலான துப்பரவு செயற்பாட்டை எந்திரங்கள் பொறுப்பேற்கக்கூடிய சந்தர்ப்பங்கள் மீதான முன்னோடிக் கருத்திட்டமொன்றை நடாத்துவதற்கு சுய தொழிலில் ஈடுபடும் பெண்கள் சங்கம் முன்மொழிந்தது.

தனிநபர் பாதுகாப்பு அங்கிகளின் வடிவமைப்பு துப்பரவேற்பாட்டுத் தொழிலின் தன்மைக்கேற்றவாறு குறித்த விதத்தில் அமையவேண்டும். நிதிப் பிரச்சினைகளால் பாடசாலையை விட்டு விலகிய அல்லது பாடசாலைகளில் இருக்கின்றபோது பாகுபாட்டுக்கு உற்படுத்தப்படுகின்ற அடுத்த பரம்பரை துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கான கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். இந்தச் சிறுவர்களுக்கான திறன் அபிவிருத்தி மற்றும் தரமுயர்த்தல் போன்றன ஊழியச் சந்தையில் அவர்களுடைய பங்கேற்றலை அதிகரிக்கும். நகரங்கள் வளர்ச்சியடைவதாலும் சனத்தொகை அதிகரிப்பதாலும், முறையான மாற்றம், வினைத்திறனான மாநகர மற்றும் நகரத் திட்டமிடல், மற்றும் தொழில்நுட்பங்கள் துப்பரவேற்பாட்டின் நன்மைக்காக வடிவமைக்கப்படுத்தல் வேண்டும்.

## தேசிய கலந்துரையாடலின் சுருக்கம்

### இந்தியா

இந்தியாவில், துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் வரலாற்றுரீதியாகக் காணப்பட்டதாக கலந்துகொண்டோர் அவதானித்ததுடன் அவை மூன்று பகுதிகளில் சுருக்கமாகக் குறிப்பிடப்படமுடியும்:

i. பிரச்சினையின் உடைமை: அதாவது, துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை உடைமையாக்குபவர் யார்? இது மத்திய (சமஸ்டி அரசாங்கம்) அல்லது அரச மட்டத்திலா உள்ளது? துப்பரவேற்பாடு அரச விடயமொன்றாகக் காணப்பட்டதாக கலந்து கொண்டோர் வாதிட்டனர். இந்தியாவில், அரச மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் கொள்கை மற்றும் சட்டங்களை இந்நிலையம் பணிக்கிறது. ஆனால், அநேகமான சந்தர்ப்பங்களில் வெவ்வேறு அரசாங்கங்களால் கொள்கைகளையும் சட்டங்களையும் பொருள்விளங்கி பிரயோகிப்பது சவாலாகக் காணப்பட்டது.

ii. நிலைபேறுதன்மை: கண்ணியமான தொழிலை ஊக்குவிப்பதில் குறுங்காலமாக இருக்கலாம் அல்லது நீண்ட காலமாக இருக்கலாம் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் சவால்களின் பிரச்சினைச் தீர்மானத்தைப் பார்க்கின்றபோது நிலைபேறான தீர்மானத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்துதல் வேண்டும். ஒவ்வொரு மூன்று தொடக்கம் ஐந்து நாட்களில் ஒரு துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர் இறப்பதாக வெவ்வேறு புள்ளிவிபர மூலங்கள் குறிப்பிடுகின்றன: குறுங்கால அடைவுகளை நோக்கி செயற்படுவதை இது கட்டாயமாக்கும் அதே வேளை நாடு நிலைபேறான நீண்ட கால தீர்வுகளை உருவாக்குகிறது.

iii. கால எல்லை: நிலைபேறு தன்மை மற்றும் குறுங்கால அடைவுகள், உடனடி, குறுகிய கால, மற்றும் நீண்ட கால மூலோபாயங்களுடன் இணைக்கப்படுகிறது. உதாரணமாக, தனிநபர் பாதுகாப்பு அங்கிகளை வழங்குதல் தொடர்பான பிரச்சினைகள் உடனடியான எதிர்காலத்தில் தீர்க்கப்படுதல் வேண்டும்.

கலந்துகொண்டோர் மூன்று பிரதான பிரச்சினைகளை எழுப்பினர்:

i. இந்தியாவில், சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும், துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் சாதி முறைமையில் மிகக் கீழ் மட்டத்தில் காணப்படுகின்றனர். வரலாற்றுரீதியாக, அவர்கள் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களாகவே வரவேண்டும் என்கிற நம்பிக்கை அவர்களிடத்தில் மிகவும் ஆழமாகப் பதியப்பட்டிருக்கிறது. இவ்வாறான வியாக்கியானங்களை எவ்வாறு மாற்றுவது, அவர்களுக்கு இருக்கின்ற மாற்று வருமான மார்க்கங்களை தேடுவதற்கான அரசியலமைப்பு உரிமை அவர்களுக்கு உள்ளது என்பதை அவர்களுக்கு அறியவைப்பது சவாலான விடயமாகக் காணப்பட்டது.

ii. இந்தியாவிலுள்ள துப்பரவேற்பாட்டுத் தொழில் மனித கழிவுகளை சுத்திகரித்தல் தவிர்ந்த அவற்றை வெறுமையாக்குதல், துப்பரவு செய்தல் மற்றும் போக்குவரத்துச் செய்தல் போன்ற விடயங்களை உள்ளடக்குகிறது. எனவே, அதிகளவிலான துப்பரவேற்பாட்டு பெருமதிச் சங்கிலி இயந்திரமயப்படுத்தப்படுதல் வேண்டும். துப்பரவேற்பாட்டு பெருமதிச் சங்கிலியின் இயந்திரமயமாதல் அவர்களை ஏனைய தொழில்களுக்கு மீள் திறன் செய்யக்கூடியதாகவும் நிலைமாற்றம் செய்யக்கூடியதாகவும் இருப்பதற்கான கவனத்தை செலுத்துதல் வேண்டும்.

iii. சரியான துப்பரவேற்பாட்டுச் செயன்முறையின் நடைமுறைப்படுத்தலுக்கான பொறுப்புக்கூறல்: உடைமைப் பிரச்சினையுடன் இணைக்கப்படுகிறது, இப்பிரச்சினைகளின் உடைமையாளர்கள் யார் என்ற தெளிவான விளக்கம் இத்துறையில் நிலவும் கண்ணியமான தொழில் குறைபாடுகளுக்கு யார் பொறுப்புக்கூறவேண்டும் என்ற வினாவைத் தீர்ப்பதற்கு உதவியாக அமையும்.

### பங்களாதேஸ்

பங்களாதேஸில் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் பிரதானமான சவால்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது:

i. இயந்திரமயப்படுத்தல் இன்மை - துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் அவர்களுடைய வேலைகளை உடலுழைப்பால் மேற்கொள்ளுதல்.
ii. உடல் காயங்கள் மற்றும் மரணத்துக்கும் இட்டுச்செல்லக்கூடிய இடர்.
iii. நச்சு வாயுக்கள் உள்ள இடத்துக்கு துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் செல்லுதலும் அவற்றைச் சந்திக்க நேரிடுதலும்.
iv. வரையறுக்கப்பட்ட அளவில் மாத்திரம் காற்று புகக்கூடிய மற்றும் காற்று புழுக்கமடையும் இடங்களுக்குள் தொழில்புரிதல்.

துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் இடர்களை நிவர்த்திசெய்வதில் பங்களாதேஸிலிருந்து கலந்துகொண்டோர் முகங்கொடுத்த சவால்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது.

i. தொழிலாளர்கள் சட்டங்களில் போதியளவான உள்ளடக்கம் இல்லாமை.
ii. கல்வியை அணுகுவதற்கான வாய்ப்பு இல்லாமை.
iii. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் மத்தியில் உயர் எழுத்தறிவின்மை மட்டம்.
iv. சமூகப்பாதுகாப்பு இல்லாமை.
v. சமூக இழுக்கு.
vi. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் மத்தியில் அதிக வறுமை நிலை.

அறிவு இடைவெளி பின்வருவனவற்றுடன் தொடர்புபட்டது:

i. தொழில் மட்டங்கள் மற்றும் சேவையின் நிலைமைகள் தொடர்பாக போதியளவு தரவுகள் இல்லாமை.
ii. பணியின் போது தொழில் ரீதியான பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் (OSH) தொடர்பான விடயங்கள் உள்ளிட்ட வழிகாட்டல்கள் இல்லாமை.
iii. இந்தத் துறையில் பயிற்சி மற்றும் திறன்கள் இல்லாமை.

### நேபாளம்

நேபாளத்தில், பின்வருவன துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் பிரதான இடர்களாக கலந்துகொண்டோரால் இனங்காணப்பட்டன:

i. முறைசாராத தன்மை.
ii. பாகுபாடு.
iii. சமூகப்பாதுகாப்பு இல்லாமை.
iv. இழுக்காக அமைதல்.

துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் இடர்களை நிவர்த்திசெய்வதில் கலந்துகொண்டோர் முகங்கொடுத்த சவால்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது:

i. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களைப் பாதுகாக்கின்ற சட்டங்கள் இல்லாமை.
ii. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் மத்தியில் அதிக வறுமை நிலை.
iii. குறைந்த பட்ச ஊதியத் திட்டம் இல்லாமை.
iv. முறைசாராத தன்மை மற்றும் அவர்கள் சங்கங்களில் சேர்வதால் தொழிலை இழக்கக்கூடும் என்ற அச்சத்தால் சங்க பிரதிநிதித்துவங்கள் இல்லாமை.

நேபாளத்திலுள்ள அறிவு இடைவெளி தொழில் மற்றும் வேலை நிலைமைகள் மீதான தரவுகள் இன்மையை தொடர்புபடுத்துவதுடன் இத்துறையின் முறைசார் தன்மை துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் வேலை நிலைமைகளை முன்னேற்றுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும்.

### பாகிஸ்தான்

பாகிஸ்தானில் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள்:

i. குறைந்த பட்ச ஊதியத்துக்கும் குறைவாக ஊதியம் வளங்கப்படுகின்றவர்களாகக் காணப்படுகின்றனர்.
ii. சுரண்டலுக்கு உட்படுகின்ற ஒப்பந்தத் தொழிலாளர்களாகக் காணப்படுகின்றனர்.
iii. எவ்வித பாதுகாப்பு உபகரணங்களுமின்றி தொழில் புரிகின்றனர்.
iv. தொழில் புரிகின்றபோது நச்சு வாயுக்களால் உயிரிழக்கின்றனர்.
v. சமூகப் பாதுகாப்பின்றிக் காணப்படுகின்றனர்.

vi. பயிற்சிகளின்றிக் காணப்படுகின்றனர்.
vii. தொழில்புரியும் இடத்தில் ஏற்படும் காயங்களுக்கு இழப்பீடுகளின்றிக் காணப்படுகின்றனர்.

ஏனைய இடர்கள் இத்துறையின் உயர்வான முறைசாரா தன்மையை உள்ளடங்குகின்றன. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் (OSH) தொடர்புபட்ட சமவாயங்களின் ஒப்புதலின் பகுதிகளிலுள்ள சந்தர்ப்பங்களையும் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பயிற்சிக் கையேடு இன்மையையும் பங்குபற்றியோர் இனங்கண்டனர். இத்துறையை முறைசார்ந்ததாக ஆக்குவதன் முக்கியத்துவத்தையும் நவீன தொழில்நுட்பங்களைத் தழுவி பிரயோகிப்பதன் மூலம் அதனை இயந்திரமயமாக்குவதன் தேவையையும் அவர்கள் வலியுறுத்தினார்.

தரவுகள் இல்லாமை மற்றும் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கான பயிற்சிக் கையேட்டின் கிடைப்பனவு போன்றவை அறிவு இடைவெளியை நிரப்புவதற்கு உதவக்கூடிய சில பகுதிகளாகக் காணப்படும் என பங்குபற்றியோர் இனங்கண்டனர்.

### மாலைதீவு

மாலைதீவில், அநேகமான சந்தர்ப்பங்களில் வெளிநாட்டவர்களுக்காகவும் ஆவணப்படுத்தப்படாத புலம் பெயர்ந்தோருக்காகவும் துப்பரவேற்பாட்டுத் தொழில் ஒதுக்கப்பட்டது. அவர்களுடைய புலம்பெயர் அந்தஸ்து காரணமாக உள்ளூர் மக்களிடமிருந்து வெளிநாட்டவர்களை வெறுக்கத்தக்க தாக்குதல்களை அவர்கள் அனுபவித்தனர். அவர்கள் குறைந்த பட்ச ஊதியத்தை விடவும் குறைவான ஊதியம் பெறுவோராகவும், ஒழுங்கமைக்கப்படாதவர்களாகவும், அநேகமாக முறை சாராத தொழிலில் ஈடுபடுவோராகவும் காணப்படுகின்றனர். அவர்களிடம் சமூகப் பாதுகாப்பு, ஆட்சி முறைமை மற்றும் அவர்களுடைய தொழிலை பாதுகாத்து ஒழுங்குபடுத்தும் சட்டங்கள் இல்லாது காணப்படுகின்றன.

மாலைதீவில் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் இடர்களை நிவர்த்திசெய்வதில் கலந்துகொண்டோர் முகங்கொடுத்த சவால்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது.

i. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் மத்தியில் முறையான புலம்பெயர் ஆவணங்கள் இல்லாமை.
ii. இலக்குவைக்கப்பட்ட அரச முறைமைகள் இல்லாமை.
iii. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களைப் பாதுகாக்கும் சட்டங்கள் இல்லாமை.

இத்துறையை முறைசார்ந்ததாக ஆக்குதல், முறையான ஆட்சி முறைமைகளைத் தாபித்தல், முழுமையாக அங்கீகரிப்பதற்காகவும் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களை சமூகத்துடன் ஒருங்கிணைப்பதற்காகவும் ஆவணப்படுத்தப்படாத புலம்பெயர்ந்தோரை ஆவணப்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு முறைமைகளை பலப்படுத்துதல் போன்றவற்றை துப்பரவேற்பாட்டிலுள்ள கண்ணியமான தொழிலை ஊக்குவிப்பதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளடக்குகின்றன. துப்பரவேற்பாட்டுத் துறையில் தொழில்புரிகின்ற புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் 2006 ஆம் ஆண்டு (இல.187) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான ஊக்குவிப்புச் சட்டகத்துக்கான சமவாயம், 1981 ஆம் ஆண்டு (இல.155) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சமவாயம் மற்றும் 1975 ஆம் ஆண்டு (இல.143) புலம்பெயர் தொழிலாளர் (துணை ஏற்பாடு) சமவாயம், 1949 ஆம் ஆண்டு (இல.97) தொழிலுக்கான இடம்பெயர்வு சமவாயம் (திருத்தியது) ஆகியவற்றுக்கு ஒப்புதலளித்து உள்நாட்டுக்குப் பொருத்தமானதாக்குவதற்கு மாலைதீவு அரசாங்கத்தை கலந்துகொண்டோர் மேலும் வலியுறுத்தினர்.

குறிப்பாக, துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் தொழில் மட்டங்கள், கல்வி மற்றும் பயிற்சி மட்டங்கள் மற்றும் தொழில் நிலைமைகளை அறிந்து கொள்வதில் அறிவு இடைவெளி ஒரு சவாலாகக் காணப்பட்டது. விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் மற்றும் பலப்படுத்தப்பட்ட கண்காணிப்பு மற்றும் பரிசோதனை முறைமைகள் அறிவு இடைவெளியை குறைப்பதற்கு உதவும் என அவர்கள் பரிந்துரை செய்தனர்.

### கலந்துரையாடல்

சவால்கள், காயம் மற்றும் தொற்று இடர்கள், சமூக இழுக்கு மற்றும் தனிமை, எழுத்தறிவு மற்றும் வறுமை ஆகியவற்றின் பிரகாரம் இப்பிராந்தியத்தில் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் நிலைமை ஒரே மாதிரியாகக் காணப்பட்டது. அத்தியாவசிய சேவைகளை வழங்கும் ஆனால் குறைந்த பட்ச ஊதியம் மறுக்கப்படுவதுடன் சமூகப் பாதுகாப்பு இன்றிய துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு கண்ணியமான தொழிலுக்கான பாரிய ஆதரவு முக்கியமாகக் காணப்பட்டது. துப்பரவேற்பாட்டுத் தொழில் பொது உடைமையில் நீடிக்கவேண்டும் என்பதுடன் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் தேவைகளுக்கும் ஆர்வங்களுக்கும் வினைத்திறனாக பதிலளிப்பதை இயலச்செய்வதற்கு நீண்ட கால நிதி முதலீடு அவசியமாகிறது.

## பெற்றுக்கொண்ட தகவல்கள்

முடிவில், பின்வருவனவற்றை உள்ளடக்கிய உப பிராந்தியத்தில் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் இடர்கள் மற்றும் சவால்களை கலந்துகொண்டோர் சுருக்கக் கூறினார்.

i. முறைசாராத் தன்மை.
ii. தனிநபர் பாதுகாப்பு அங்கி இல்லாமை.
iii. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் தொழிலுக்கு அங்கீகாரம் இல்லாமை.
iv. போதியளவான தேசிய சட்டங்கள் மற்றும் அவற்றின் பிரயோகம் இல்லாமை.
v. உடல் காயங்கள் மற்றும் சுகயீன இடர்கள்.
vi. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கான மாற்று ஜீவனோபாயம் இல்லாமை.
vii. ஊழியப்படையில் இருந்து துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் நீக்கம்.
viii. சமூகப் பாதுகாப்பு இல்லாமை.
ix. உயர் அளவிலான வறுமை மற்றும் எழுத்தறிவின்மைச் சம்பவங்கள்.
x. சமூக இழுக்கு மற்றும் பாகுபாடு.
xi. சங்க பிரதிநிதித்துவம் இல்லாமை.
xii. பிரச்சினை மற்றும் பொறுப்புக்கூறலின் உடைமை இல்லாமை.
xiii. தலையீடுகளின் மோசமான நிலைபேறுதன்மை.

## நாள் 2: 2021 ஒக்டோபர் 12

### குழுக் கலந்துரையாடல்: சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனத்தின் அனுபவங்கள்: சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனம் கற்றுக்கொண்ட தொடர்புபட்டதும் பயனுள்ளதுமான அனுபவங்கள் யாவை?

கண்ணியமான தொழிலை ஊக்கப்படுத்துவதில் சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனம் மற்றும் அதன் நெறிசார் கருவிகளின் பூகோளப் பாத்திரத்தை தெற்காசியாவுக்கான சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனத்தின் கண்ணியமான தொழில் அணியின் (DWT) தொழிலில் அடிப்படைக் கோற்பாடுகள் மற்றும் உரிமைகள் மீதான நிபுணர்கள் சுட்டிக்காட்டினார். தொழிலில் அடிப்படைக் கோற்பாடுகள் மற்றும் உரிமைகள் மீதான சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனத்தின் பிரகடனத்தின் நான்கு தூண்கள் மற்றும் இத்துறையுடன் ஒன்றுசேரும் சமவாயங்களின் தொடர்பு ஆகியவற்றை அவர் சுட்டிக்காட்டினார்.

i. சிறுவர் உழைப்பு: சிறுவர் உழைப்பை வினைத்திறனான முறையில் இல்லாது செய்தல்.
ii. வலுக்கட்டாய உழைப்பு: அனைத்து விதமான வலுக்கட்டாய அல்லது கட்டாய உழைப்பையும் இல்லாது செய்தல்.
iii. வேலையில் பாகுபாடு: தொழில் மற்றும் உத்தியோகம் தொடர்பான பாகுபாட்டை இல்லாது செய்தல்.
iv. கூடுவதற்கான சுதந்திரம் மற்றும் கூட்டுப் பேரம்பேசும் உரிமை.

இத்துறையானது பல்வேறு வகையான பாகுபாடு (அதாவது சாதி, சமயம், பால்நிலை, புலம்பெயர் நிலை, இனம் போன்ற) காரணமாகப் பாதிக்கப்பட்டதாகவும் தொழிலிலுள்ள பாகுபாட்டுப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பல்வேறு பணிகளை சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனம் மேற்கொண்டிருந்ததாகவும் அவர் தெளிவுபடுத்தினார். மனித அபிவிருத்தியுடன் தொடர்புடைய பாகுபாட்டுக் கோட்பாடு மற்றும் மனித கௌரவம் மற்றும் பாகுபாடின்மை மீதான சர்வதேச கருவிகளுடன் உறுதிப்படுத்துவதற்கு குறித்த தொழிலொன்றுக்கு சில மக்கள் பிரிவினரை வரையறுப்பதற்காக வடிவமைக்கப்பட்ட பாகுபாடுடைய சட்டங்கள் களையப்படுதல் வேண்டும்.

குறிகாட்டிகள் மற்றும் விழுப்புணர்வு போன்றவற்றை உருவாக்கி வலுக்கட்டாய உழைப்புக்கு எதிராகப் போராடுவதற்கு நிறைய விடயங்களை சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனம் மேற்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார். சில தொழில்களின் சமூகக் கட்டமைப்பு வித்தியாசமான கோணத்தில் வழங்கப்பட்டிருந்தாலும் உடலுழைப்பால் மேற்கொள்ளப்படும் சாக்கடைத் துப்பரவு போன்ற சில தொழில்கள் வலுக்கட்டாய உழைப்பு எனும் சட்ட வரைவிலக்கணத்துக்குள் உள்ளடங்காது என அவர் அவதானித்தார். உதாரணமாக, உடலுழைப்பால் மேற்கொள்ளப்படும் சாக்கடைத் துப்பரவுத் தொழிலாளர்கள் அவர்களுக்கு வேறு எந்தவொரு தேர்வின்றிய காரணத்தால் அத்தொழிலிலேயே தொடர்ந்திருப்பதற்கு சமூகரீதியாக வலுக்கட்டாயமாக்கப்படுகிறார்கள் - தொழிற் சந்தையிலிருந்து அவர்கள் நீக்கப்படுகிறார்கள். உடலுழைப்பால் மேற்கொள்ளப்படும் சாக்கடைத் துப்பரவில் ஈடுபடும் தொழிலாளர்கள் தொழிற்படும் சமூகச் சூழமைவு வலுக்கட்டாய உழைப்பின் இரு ஆக்கக்கூறுகளைக் கொண்டுள்ளது: சுய விருப்பமின்மை மற்றும் அபராத அச்சுறுத்தல். உடலுழைப்பால் மேற்கொள்ளப்படும் சாக்கடைத் துப்பரவுத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் அவர்களுடைய சமூகத் தரப்படுத்தல் மற்றும் பாகுபாட்டு அபராதங்கள் மற்றும் மாற்று ஜீவனோபாயத்தை தெரிவுசெய்ய முயற்சிக்கின்றபோது அவர்கள் முகங்கொடுக்கும் சமூக இழுக்கு ஆகியவற்றால் அவர்கள் இத்தொழிலில் ஈடுபடுவதற்கு வலுக்கட்டாயமாக்கப்படுவதாக வாதிட முடியும்.

சிறுவர் உழைப்பு இத்துறையில் காணப்படுவதாக அவர் வாதிட்டார். சிறுவர்களுக்கு கல்வியூடாக மாற்றுச் சந்தர்ப்பங்கள் அளிக்கப்படாமல் அவர்களுடைய பெற்றோர்களின் தொழிலிலேயே தொடர்வதற்கு தயார்படுத்தப்படுகிறார்கள். உடலுழைப்பால் மேற்கொள்ளப்படும் சாக்கடைத் துப்பரவுத் தொழிலின் தாழ்வடையும் நடைமுறைகளை நிலைநிறுத்துவதற்கான கருவியொன்றாக ஆரம்ப வயதிலிருந்தே சிறுவர் உழைப்பு உருவாகியிருக்கிறது. சிறுவர்கள் உடலுழைப்பால் மேற்கொள்ளப்படும் சாக்கடைத் துப்பரவுத் தொழிலை அவர்களுடைய விதியாகவும் ஜீவனோபாயமாகவும் ஏற்றுக்கொள்வதற்கு உளவியல் ரீதியாகவும் உடல் ரீதியாகவும் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளனர். சிறுவர் உழைப்புக்கெதிராகப் போராடுவதற்கும் அந்நடைமுறையின் பரம்பரைக்கிடையிலான வட்டத்தை இல்லாதொழிப்பதற்கும் சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனம் தொழிற்பட்டிருந்தது. உடல், உயிரியல், இரசாயன மற்றும் தொழிற்சூழலியல் ஆபத்து அதேபோன்று நலன்புரி வசதிகள் இன்மை, நீண்ட வேலை நேரம் மற்றும் வன்முறை மற்றும் தொந்தரவுச் சம்பவங்கள் போன்ற துப்பரவேற்பாட்டுத் தொழிலுடன் தொடர்புடைய வெவ்வேறு வகையான ஆபத்துகளை OSH மற்றும் DWT இலிருந்த உழைப்புப் பரிசோதனைகள் மீதான நிபுணர் சுட்டிக்காட்டினார்.

மூலங்களில் தொழில் முறைகள் மற்றும் நடைமுறைகளை முன்னேற்றுவது அவசியமாகக் காணப்பட்டது என அவர் அவதானித்தார். இந்நடவடிக்கைகள் பாதுகாப்பான தொழில் நடைமுறைகள் மற்றும் இலகுவாகப் பயன்படுத்தக்கூடிய உபகரணங்களின் பாவனை, தொழிலாளர்களுக்கு எவ்வித செலவுமின்றி தொழிலாளர்களுக்கான போதுமான தனிநபர் பாதுகாப்பு அங்கிகள், கலந்துகொள்ளக்கூடிய பயிற்சி செயல்முறையியலின் பயன்பாடு மற்றும் அவசியமான சமூகப் பாதுகாப்பை நடைமுறைப்படுத்தல் போன்றவற்றை உள்ளடக்குதல் வேண்டும். இடர் அடையாளம், விழிப்புணர்வூட்டுதல், பயிற்சி, இரசாயனப் பாவனை, தொழில்சார் விபத்துகளின் அறிக்கையிடல், மற்றும் உள்ளூர் ஆட்சி நிகழ்ச்சித்திட்டத்தில் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பின் உள்ளடக்கம் போன்றவற்றை உள்ளடக்கும் மலச் சகதி முகாமைத்துவத்திலுள்ள (FSM) OSH இன் சில சிறந்த நடைமுறைகளை அவர் சுட்டிக்காட்டினார். பாதுகாப்பானதும் வினைத்திறனானதுமான துப்பரவேற்பாட்டுச் சேவைகளை வழங்குவதற்கு உதவுவதும் உடலுழைப்பால் வெறுமையாக்கும் நடைமுறையை படிப்படியாக மாற்றீடு செய்வதுமான இத்துறையில் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களை அவர் மேலும் அவதானித்தார்.

ஒருமைப்படுத்தப்பட்ட தேசிய அல்லது அரச OSH நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்குவதற்கு சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள், அமுல்ப்படுத்தல் மற்றும் பரிசோதனை, பணி இட OSH குழு, சிறிய பொறுப்புமுயற்சி அல்லது முறைசாராத் தன்மை, மற்றும் விபத்து அல்லது நோயை அறிக்கையிடும் முறைமைகளை சில முன்னுரிமைப் பகுதிகளாக உள்ளடக்குவதற்கு அவர் இனங்கண்டார். தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீதான சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனம், குறிப்பாக 1981 ஆம் ஆண்டு (இல. 155) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சமவாயம், 1985 ஆம் ஆண்டு (இல. 161) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சமவாயம், மற்றும் 2006 ஆம் ஆண்டு (இல. 187) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சமவாயத்துக்கான ஊக்குவிப்பு சட்டகம் ஆகியவற்றை ஆற்றுப்படுத்துவதற்கான சில முக்கிய கருவிகளாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

துப்பரவேற்பாட்டுத் துறையிலுள்ள தொழில் வழங்குனர்களுடன் அநேகமான தொழில்வழங்குனர் அமைப்புகள் ஈடுபாடற்ற நிலையில் காணப்பட்டதாக DWT இலிருந்த தொழில் வழங்குநர்களின் செயற்பாட்டாளர்கள் மீதான நிபுணர் அவதானித்தார். கற்புலனாகாத்தன்மை, OSH சவால்கள், சமூக இழுக்கு மற்றும் பாகுபாடு ஆகியவற்றை உள்ளடக்கிய பல்வேறு சவால்களுக்கு இத்துறை முகங்கொடுத்ததான ஏகமனதான கருத்தொன்று காணப்பட்டது. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் சில நேரங்களில் அவசர தீர்வுகளின்றி நீண்ட கால நிலைபேறான தீர்வுகள் அவசியப்படுகின்ற சிக்கலானதாகவும் வரலாற்றுரீதியானதாகவும் காணப்படுகிறது.

தேசிய சட்டங்களின் பிரயோகம் பாரியதொரு சவாலாகக் காணப்பட்டது. உதாரணமாக, இந்தியாவிலுள்ள குறித்த சட்டங்களின் பிரயோகம் குறைந்ததாகக் காணப்பட்டதுடன் இது இருப்பது தொடர்பாக சமூகப் பங்காளர்கள் அறிந்திருக்கவும் இல்லை. சட்டரீதியான பாதுகாப்பு இன்மைக்கான காரணமாக முறைசாராத்தன்மை அமைய முடியாது என அவர் வாதிட்டார். சில நாடுகள் சட்டங்களைக் கொண்டிருந்தாலும் அச்சட்டங்கள் தொழிலாளர்களுக்கு நன்மையளிப்பதில்லை. குறிப்பாக, காணப்படும் சட்டங்கள் தொடர்பாக தொழிலாளர்களுக்கு அறிவிப்பதற்கு விழிப்புணர்வு பிரச்சாரங்கள் முக்கியமாகக் காணப்பட்டதாக அவர் விதப்புரை செய்தார்.

துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் வலுவூட்டப்படவேண்டும் என்பதுடன் அதனால் அவர்கள் அவர்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும் அவர்களுடைய கூட்டுப் பேரம்பேசும் உரிமையைப் பாதுகாப்பதற்கும் அவர்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு முடியும் என தொழிலாளர் செயற்பாட்டாளர்கள் மீதான சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனத்தின் (புது டில்லி - CO) நிபுணர் வலியுறுத்தினார். துப்பரவேற்பாட்டுத் துறையிலுள்ள தொழிற் சங்கங்கள் மற்றும் தொழிலாளர் அமைப்புகள் முறைசாராத் தன்மை, சமூகரீதியான தனிமைப்படுத்தல், மற்றும் பாகுபாடு காரணமாக அழிந்துபோகும் நிலைக்கு உள்ளாகியிருந்தன.

.

## கருப்பொருள் வினா: சிறந்த நடைமுறைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்

## இவ்வாறான இடர்களையும் சவால்களையும் நிவர்த்திசெய்வதற்கு அரசாங்கங்களும் சமூகப் பங்காளர்களும் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் யாவை?

## தேசிய கலந்துரையாடல்களின் சுருக்கம்

### இந்தியா

ஒப்பந்தத் தொழிலாளர்கள் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் மட்டத்தில் கவனிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் தனியார் மயப்படுத்தல் நிச்சயமற்ற தன்மையை அதிகரித்ததாக இந்தியாவிலிருந்து கலந்துகொண்டோர் ஏற்றுக்கொண்டனர். விசேடமாக, இத்துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் விதியை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்த கோவிட் - 19 உலகத்தொற்று நிலைமையின் போது தொழிலாளர்களின் உரிமைகளையும் கண்ணியமான தொழில் நடைமுறைகளையும் ஊக்குவிப்பதற்கான சில முயற்சிகள் சங்கங்களால் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக கலந்துகொண்டோர் ஏற்றுக்கொண்டனர். இந்தத் துறையை முறைசார்ந்ததாக ஆக்குவாதற்கான வளர்ந்துவரும் கேள்வியும் காணப்பட்டது. தொழிற் சங்கங்கள் கண்ணியமான தொழில் பிரச்சார நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபடுத்தப்பட்டன.

### பங்களாதேஸ்

கழிவகற்றல் முறைமைகளின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பை ஊக்குவிக்கும் 1996 ஆம் ஆண்டின் நீர் வழங்கல் அதிகாரசபைச் சட்டம் மற்றும் கழிவுகளின் முகாமைத்துவத்தை கட்டாயப்படுத்தும் 2009 ஆம் ஆண்டின் நகரக் கூட்டுத்தாபனச் சட்டம் ஆகியவற்றை சட்டமாக்குதல் உள்ளிட்ட சட்ட மறுசீரமைப்புகளை அரசாங்கம் மேற்கொண்டிருந்தது. 2017, நவம்பர் மாதத்தில், சிறந்த துப்பரவேற்பாட்டுச் சேவையை வழங்குவதனைத் தொடர்வதற்கு தெளிவான வழிகாட்டல்களுடன் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு வழங்கிய நிறுவனரீதியான ஒழுங்குபடுத்தும் சட்டகமொன்றை உள்ளூராட்சி அதிகாரசபைகள் நிறைவேற்றின.

துப்பரவேற்பாட்டுத் துறைமீதான போதியளவான தரவுகள் காணப்படவில்லை எனவும் அதுதொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படவில்லை எனவும் தொழில் வழங்குனர்களாகக் கலந்துகொண்டோர் அவதானித்தனர். ஆகையால், குறிப்பாக தனிநபர் பாதுகாப்பு அங்கிகளின் பாவனை மீதான பொதுவான உணர்ச்சிவசமான நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு எந்த சுறுப்பான முன்னெடுப்புகளையும் தொழில் வழங்குனர்கள் இத்துறையில் கொண்டிருக்கவில்லை. இத்துறையில் தற்போதுள்ள குறைந்த ஊதியம் தொடர்பாக பங்களாதேஸிலிருந்து கலந்துகொள்வோர் சுட்டிக்காட்டியதுடன் தொழிலில் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் அடிப்படைக் கொள்கைகையும் உரிமைகளையும் நீடிப்பதற்கு அரசாங்கங்களைக் கோரினர். அரசாங்கம் சமூகப் பாதுகாப்பை வழங்குவதுடன் குறிப்பாக வெளியாட்களிடம் பணியை ஒப்படைத்தல் மற்றும் ஒப்பந்தத் தொழில் ஆகியவற்றில் ஈடுபடுவோர் தொடர்பான விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் சீர்திருத்துவதற்குமான நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

### நேபாளம்

நேபாளத்தில், தொழிலாளர்களின் உரிமைகைப் பாதுகாப்பதற்கு அரசியலமைப்பு ஏற்பாடுகள் காணப்படுகின்றன. தொழில் கண்காணிப்புகள் மூலமான கண்ணியமான தொழிலையும் தொழில் சட்டம் ஊக்குவிக்கிறது. துப்பரவேற்பாடு உள்ளிட்ட அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கும் தேசிய OSH கொள்கையையும் இந்த நாடு உருவாக்கியுள்ள அதேவேளை துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் சவால்களுக்கு பதிலளிப்பதற்காக சில சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் திருத்தப்பட அல்லது இற்றைப்படுத்தப்படவேண்டும் எனவும் ஏற்றுக்கொண்டனர்.

### பாகிஸ்தான்

பாகிஸ்தானில், கடுமையான நியம தொழிற்பாட்டு நடைமுறைகளின் பிரகாரம் துப்பரவேற்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை வைத்தியசாலைகள் உள்ளிட்ட ஔடதக் கைத்தொழில்கள் உருவாக்கின. மூன்றாம் தரப்பினர்களால் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் பணிக்கமர்த்தப்படுவதுடன் சமூகப் பாதுகாப்பும் வழங்கப்படுகிறது. பொதுத்துறை துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் சிறந்த கூட்டுப் பேரம்பேசும் உடன்படிக்கைகளைக் கொண்டுள்ளதுடன் அவர்களுடைய சங்கங்களூடாக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட சிறந்த தொழில் நிலைமைகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தியிருக்கிறார்கள். முறைசார் துறையிலுள்ள தொழில் வழங்குனர்கள் தனிநபர் பாதுகாப்பு அங்கி மற்றும் உரிய OSH வசதிகளையும் வழங்குவதற்குமான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர். சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப் பிரச்சினைகள் தொடர்பாக தொழிலாளர்கள் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனம் ஏனைய சமூகப் பங்காளர்களுடன் இணைந்ததாக குறிப்பாக துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்காக செயற்படுதல் வேண்டும்.

### மாலைதீவு

மாலைதீவில், சுத்தம் தொடர்பான சில விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் செயலமர்வுகளையும் தொழில் வழங்குனர்களின் ஒழுங்கமைப்புகள் நடாத்தியிருந்தன. பாரிய மாலைதீவிலுள்ள துப்பரவேற்பாட்டுத் துறையைப் பாதுகாப்பதற்காக தொழில் சட்டங்களையும் ஒழுங்குபடுத்தும் சட்டகங்களையும் திருத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருந்த போதிலும் கழிவு முகாமைத்துவ முறைமைகள் அற்ற புறத் தீவுகள் தொழில் நியமங்களை நிறைவேற்றுவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் இன்னும் பின்தங்கியிருந்தன. முறையான கழிவு முறைமைகளைக் கொண்டிருப்பது அரசாங்கக் கொள்கையாகும். துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களை உள்ளடக்கும்

காப்புறுதித் திட்டத்தையும் அரசாங்கம் உருவாக்கிக்கொண்டிருந்தது. தொழிற்பாட்டு நடைமுறைகளையும் நியமங்களையும் இத்துறையில் செயற்படும் பிரதான கம்பனிகள் உருவாக்கியுள்ளதுடன் பாதுகாப்பு வழிகாட்டல்கள் தொடர்பாக தொழிலாளர்கள் தொடர்ச்சியாக பயிற்றுவிக்கப்பட்டனர். துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்காக குறைந்த பட்ச ஊதியமொன்றையும் சமூகப் பாதுகாப்பையும் அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்திருந்தது.

துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களை ஏற்றுக்கொள்வதற்கான மக்களுடைய மனப்பாங்கை மாற்றுவதற்கும் அவர்களுக்கு அவர்கள் தகுதி பெற்றிருக்கும் கௌரவத்தைக் கொடுப்பதற்குமான அவசியத்தை கலந்துகொண்டோர் வலியுறுத்தினர்.

## கலந்துரையாடல்

சில நாடுகளில் தொழிற் சட்டங்கள் தவறான முறையில் பயன்படுத்துவதற்கு தொழிலாளர்களை உற்படுத்தும் கோவைகள் மற்றும் ஒழுங்குவிதிகளால் பலவீனப்படுத்தப்பட்டும் மாற்றீடு செய்யப்பட்டும் காணப்பட்டது. அநேகமான துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் உயர் எழுத்தறிவின்மை காரணமாக தற்போதுள்ள தொழிற் சட்டங்கள் தொடர்பாக அறிந்திராது காணப்பட்டனர். துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களில் உள்ளடக்குவதன் மூலம் அவர்களை ஒழுங்கமைப்பதற்கான வழிகளைக் கண்டுபிடிப்பதற்கான தேவை தொழிற் சங்கங்களுக்குக் காணப்பட்டது.

பொதுவாக, அநேகமான நாடுகளில் தொழிற் சட்டங்கள் காணப்படுவதுடன் சில அரசாங்கங்கள் துப்பரவேற்பாட்டுத் தொழிலுக்கு உரித்தான நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆரம்பித்திருக்கின்றன. சில நாடுகளில் காணப்படும் சட்ட விடயங்களை தொழிலாளர்கள் புரிந்து கொள்வதில் உயர் எழுத்தறிவின்மை மட்டங்கள் பாரிய சவாலை ஏற்படுத்தியிருக்கிறது.

## பெற்றுக்கொண்ட தகவல்கள்

கலந்துரையாடல்களிலிருந்து பெற்றுக்கொண்ட தகவல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது:

i. தொழிலின் முறைசாரா மற்றும் நிச்சயமற்ற தன்மை.
ii. தனிநபர் பாதுகாப்பு அங்கிகள் (PPE) இல்லாமை.
iii. உடல் காயங்கள் மற்றும் சுகயீன இடர்கள்.
iv. சமூகப் பாதுகாப்பு இல்லாமை.
v. சமூக இழுக்கு மற்றும் புறக்கணிப்பு.
vi. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் தொழிலுக்கு அங்கீகாரம் இல்லாமை.
vii. குறித்த தேசிய சட்டங்கள் இல்லாமையும் இருக்கின்ற சட்டங்களின் சமமற்ற பிரயோகமும்.
viii. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கான மாற்று ஜீவனோபாயம் இல்லாமை.
ix. ஊழியப்படையிலிருந்து துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் நீக்கம்.
x. உயர் வறுமை மற்றும் எழுத்தறிவின்மை நிகழ்வுகள்.
xi. பால்நிலை மற்றும் புலம்பெயர் தகுதி நிலைகள் மற்றும் இன அல்லது சாதி போன்ற ஏனைய காரணிகளை அடிப்படையாகக் கொண்ட புறக்கணிப்புக்கு கவனம் செலுத்தாமை.
xii. தொழிற் சங்க பிரதிநிதித்துவம் இல்லாமை.
xiii. பிரச்சினையின் உடைமை மற்றும் பொறுப்புக்கூறல் இல்லாமை.
xiv. தலையீடுகளின் நிலைபேறுதன்மை.
xv. அறிவு இடைவெளி மற்றும் தரவுகள் இல்லாமை.

## நாள் 3: 2021 ஒக்டோபர் 13

நீர் தொழிலொன்றாகக் காணப்படுவதாகவும் அதில் அதன் பாதுகாப்புக்கும் சுத்தமான விநியோகத்துக்கும் தொழிலாளர்கள் தேவைப்படும் அதே வேளை தொழிலின் நிலைமைகளை உருவாக்கி முன்னேற்றுவதை வலியுறுத்தி சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் கலந்துகொண்ட உலக மலசலகூட தினத்துக்கான 2016 ஊக்குவிப்பு காணொளியுடன் நாள் ஆரம்பமானது. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் பசுமையான நீரின் முக்கியமான பங்கை அவர் வலியுறுத்தியதுடன் தரமான தொழில்களின் உருவாக்கம் மற்றும் நீரின் கிடைப்பனவு மற்றும் நிலைபேறான முகாமைத்துவம் ஆகியவற்றுக்கிடையிலான தெளிவான மற்றும் நேரான தொடர்பை சுட்டிக்காட்டினார். நீர்த் துறையில் தொழில்புரியும் மில்லியன் கணக்கான மக்கள் அடிப்படை தொழிலாளர் உரிமைகளால் ஏற்றுக்கொள்ளப்படவுமில்லை பாதுகாக்கப்படவுமில்லை என அவர் அவதானித்தார்.

### கருப்பொருள் வினா: எதிர்காலத் திட்டத்தை வகுத்தல்

**இத்துறையிலுள்ள வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் இவ்வாறான சவால்களை நிவர்த்திசெய்வதற்கும் சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனம், அரசாங்கங்கள் மற்றும் சமூக பங்காளர்கள் ஆகியோர் கடைப்பிடிக்கக்கூடிய மூலோபாயங்கள் யாவை?**

### திறந்த கலந்துரையாடல்

திறந்த கலந்துரையாடலின் போது, கலந்துகொண்டோரால் பின்வரும் மூலோபாயங்கள் முன்மொழிப்பப்பட்டன.

i. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கான கண்ணியமான தொழிலுக்கான ஆதரவு தேடல் மற்றும் அவர்களுடைய தொழிலை நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 8 உடன் இணைத்தல்.
ii. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் உடனடிப் பிரச்சனைகளை அளவீடுசெய்தல்.
iii. விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்
iv. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கான குறித்த சட்டங்களை அரசாங்கங்கள் நிறைவேற்றுதல்.
v. இவ்விடயம் தொடர்பான கருத்துக்களைப் பரிமாற்றுவதற்கு வட்ஸ் அப் குழுமத்தை உருவாக்குதல்.
vi. நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 6 (நீர் மற்றும் துப்பரவேற்பாடு), நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 8 (கண்ணியமான தொழில் மற்றும் பொருளாதார அபிவிருத்தி), மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 11 (நிலைபேறான நகரங்கள்) ஆகியவற்றை இணைத்தல்.
vii. சட்டங்கள் பற்றி தொழிலாளர்கள் மத்தியில் விழிப்புணர்வு மீதான அதிக ஆய்வுகளை மேற்கொள்ளல்.
viii. மக்களுடைய மனப்பாங்கை மாற்றுவதற்கு தரவுகளைப் பயன்படுத்துதல்.
ix. இத்துறையை முறைசார்ந்ததாக ஆக்குவதற்கான ஆதரவு தேடல்.
x. ஒழுங்கமைப்பதற்காக தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்கும் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் நீண்ட காலக் கடப்பாடுகளை உருவாக்குதல். ஒழுங்குபடுத்தும் செயற்பாடு ஒரு நீண்டகாலச் செயற்பாடு என்பதுடன் அது எப்போதும் தொழிலாளர்களுடன் தோளோடு தோள்சேர்த்துப் பயணிக்கும் வெளி ஆலோசகர்களிடமிருந்து நீண்ட கால கடப்பாடுகளை வேண்டுகிறது.
xi. தேசிய மட்டத்தில் ஒருகிங்கிணைப்புக் குழுக்களை இஸ்தாபித்தல்
xii. தொழிலாளர் உதவுத் தொலைபேசி இலக்கங்களை உருவாக்குதல்.
xiii. தனியார்மயப்படுத்தலின் தாக்கங்கள் மீதான (PSI) ஆய்வை மேற்கொள்ளல்.
xiv. மலசலகூடங்கள் வழங்கப்படுவதின் தாக்கம் மீதான ஆய்வை மேற்கொள்ளல்.
xv. சிறிய கம்பனிகளைக் கூட சிறந்த நடைமுறைகள் மற்றும் சர்வதேச நியமங்களுக்குக் கட்டுப்படுவற்கு ஊக்கமளித்தல்.
xvi. தொழிற் சந்தையில் அவர்களுடைய பங்கேற்றலை உயர்த்துவதற்கு திறன் அபிவிருத்திகளை ஊக்குவித்தல்.
xvii. இத்தேவைகளின் அரசாங்க பொறுப்பின் முழு உரிமையினை மேம்படுத்தலும் கோருதலும்.
xviii. புத்தாக்கமானதும் சமூக ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெயர்களைக் கொண்டு துப்பரவேற்பாட்டுத் தொழிலுடன் தொடர்புடைய சமூக ரீதியாக தரங்குறையும் பெயர்களை மாற்றீடு செய்தல் (உதாரணம்: பிரேசிலில் "மீள்சுழற்சி செய்யக்கூடியவற்றை சேகரிப்போர்")
xix. தனிநபர் பாதுகாப்பு அங்கிகளையும் சீருடைகளையும் அரசாங்கம் வழங்குதல்.
xx. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களை நிலைபேறுதன்மை மற்றும் சூழல் பாதுகாப்பின் தூதுவர்களாக பாடசாலைகளுக்கு கொண்டுவருதல்.

xxi. விவாசாயத்துறையிலுள்ள நண்பர்களை ஒரே அணியில் கொண்டுவருதல்.
xxii. பயிற்சிச் சந்தர்ப்பங்களுக்கு வாய்ப்பை வழங்குதல்.
xxiii. கோவிட்-19 நிலைமையில் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் நிலைமை தொடர்பாக ஆய்வை மேற்கொள்ளல்.
xxiv. பெண் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் செயலாற்றல் விருத்தி.

## தேசிய கலந்துரையாடல்களின் சுருக்கம்

தேசிய குழுக் கலந்துரையாடல்களின் பின், இத்துறையில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் கண்ணியமான தொழில் குறைகளை நிவர்த்திசெய்வதற்கும் நாடு-குறித்த மூலோபாயங்களை நாடுகள் முன்மொழிந்தன.

### இந்தியா

இந்தியாவிலிருந்து கலந்துகொண்டோர் பின்வரும் மூலோபாயங்களை இனங்கண்டனர்:

i. தனியார்மயப்படுத்தல் மூலோபாயங்களை மீள் பரிசீலனை செய்தல்.
ii. குப்பை இலாபமுழைப்போருக்கு எதிரான பிரசாரத்தின் முயற்சிகளை விரைவுபடுத்தல்.
iii. ஒப்பந்த மற்றும் சீரான தொழிலாளர்களின் சமநிலையை அடைதல்.
iv. சட்டங்களை கோவைகளுடன் ஈடுசெய்யும் வளர்ந்துவரும் போக்கை எதிர்த்தல்.

### பங்களாதேஸ்

பங்களாதேஸிலிருந்து கலந்துகொண்டோர் பின்வரும் மூலோபாயங்களை இனங்கண்டனர்:

i. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் கண்ணியமான தொழிலை ஊக்கப்படுத்தும் கொள்கைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்தலும் அதேபோன்று முன்னுரிமைப் பகுதிகளை இனங்காணலும்.
ii. சட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கான மூலோபாயங்களை உருவாக்குதல்.
iii. சமூகப் பங்காளர்களுடன் ஆலோசனைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்.
iv. சர்வதேசப் பங்காளர்களுடன் தொடர்புகளைப் பேணுதல்.
v. தேசிய சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் இற்றைப்படுத்துதல்.
vi. நியமங்களை நடைமுறைப்படுத்தல்.
vii. தொழிலாளர் கண்காணிப்பு முறைமைகளை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.
viii. பல்வேறுபட்ட ஊடகத் தளங்களூடாக பிரச்சாரத்தை கொண்டு நடாத்துதல்.
ix. தொழில் புரியும் இடங்களில் இடர்களை அடையாளம் காணல்.
x. புகையிரதத் துப்பரவுத் தொழிலாளர்கள்.
xi. சகதியை பாதுகாப்பான முறையில் போக்குவரத்துச் செய்வதற்கும் களஞ்சியப்படுத்துவதற்கும் முன்னெடுப்புகளை மேற்கொள்ளல்.
xii. விபத்து மற்றும் மரணத் தரவுகளை ஆவணப்படுத்தல்.
xiii. தொழில் புரியும் இடங்களில் OSH களை இஸ்தாபித்தல்.
xiv. அரசாங்கக் கேள்விகளை நிவர்த்திசெய்தல்.
xv. OSH வழிகாட்டல்களை பின்தொடர்தல்.
xvi. தொழிலாளர்களுக்கு தனிநபர் பாதுகாப்பு அங்கிகளை வழங்குதல்.
xvii. OSH பயிற்சிகளிலும் பிரச்சாரங்களிலும் கலந்துகொள்ளுதல்.

### நேபாளம்

நேபாளத்திலிருந்து கலந்துகொண்டோர் பின்வரும் மூலோபாயங்களை இனங்கண்டனர்:

i. இத்துறையின் கட்டமைப்பையும் அதன் சவால்களையும் புரிந்துகொள்வதற்காக ஆய்வுகளை நடாத்துதல்.
ii. சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனத்தின் உதவியுடன் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களை ஒழுங்குபடுத்தல்.
iii. OSH தேசிய நியமங்களை உருவாக்குதல்.
iv. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளரை இனங்கண்டு அங்கீகரித்தல்.

v. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கான இலக்குவைக்கப்பட்ட வழிகாட்டல்களை உருவாக்குதல்.
vi. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள், அவர்களுடைய தொழில்வழங்குனர்கள் மற்றும் அரசாங்கங்கள் ஆகியவற்றுக்கிடையிலான சமூகக் கலந்துரையாடலை ஊக்குவித்தல்.
vii. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பான தொழில் நிலைமைகளை உறுதிப்படுத்துதல்.
viii. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல்.
ix. தொழில் தொடர்பான விபத்துக்களை அரசாங்கத்துக்கு அறிக்கையிடல்.
x. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கான தொழிலில் அடிப்படைக் கொள்கைகளையும் உரிமைகளையும் ஊக்குவித்தல்.
xi. பயிற்சிகளில் கலந்துகொள்ளல்.

அவர்கள் பின்வருமாறு சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனத்தை வலியுறுத்தினார்:

i. சிறந்த நடைமுறைகளைப் பகிர்வதற்கான உப பிராந்திய அறிவுத் தளமொன்றை உருவாக்குதல்.
ii. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்பை ஊக்குவித்தல்.
iii. சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனத்தினால் மேற்கொள்ளப்படும் ஆற்றல் விருத்தி உள்ளிட்ட கொள்கைப் பணியின் பிரயோகத்தில் உதவுதல்.

### பாகிஸ்தான்

பாகிஸ்தானிலிருந்து கலந்துகொண்டோர் பின்வரும் மூலோபாயங்களை இனங்கண்டனர்:

i. மாகாண மட்டங்களில் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கான குறித்த சட்டங்களைத் தழுவுதல்.
ii. தனியார் ஊழியர்களின் ஒழுங்கமைப்பதற்கான உரிமையைப் பாதுகாத்தல்.
iii. துப்பரவேற்பாட்டுத் தொழிலுக்குரிய சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனத்தின் சமவாயமொன்றை உருவாக்குதல்.

### மாலைதீவு

மாலைதீவிலிருந்து கலந்துகொண்டோர் துப்பரவேற்பாபட்டுத் தொழிலாளர்களுக்கான பயிற்சி மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தை வடிவமைப்பதின் மூலோபாயத்தை இனங்கண்டனர்.

## ▶ வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் இந்த உப பிராந்தியத்தில் துப்பரவேற்பாட்டுத் தொழிலார்கள் முகங்கொடுக்கும் சவால்களை நிவர்த்திசெய்வதற்குமான மூலோபாயங்கள்.

எதிர்கால நடவடிக்கைக்கான பாதை வரைபடமொன்றாக கலந்துகொண்டோரால் தழுவப்பட்டு இச்செயலமர்வின் போது சமர்க்கிக்கப்பட்ட முன்மொழிவுகளின் பின்வரும் சுருக்கத்தை அலுவலகம் சமர்ப்பித்தது

i. துப்பரவேற்பாட்டுச் சேவைக்கான முழு உடைமையையும் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

ii. அரசாங்கங்களும் தொழில் வழங்குனர்களும் தொழிலாளர்களுக்கு எவ்வித செலவுமின்றி தொழிலாளர்களுக்கு போதுமான தனிநபர் பாதுகாப்பு அங்கிகளை வழங்கி அவற்றை பராமரிப்புச் செய்தல் வேண்டும்.

iii. கலந்துகொண்டோர் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கான கண்ணியமான தொழிலுக்காக ஆதரவு தேடுவதுடன் அவற்றை நீர் மற்றும் துப்பரவேற்பாடு மீதான நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 6, கண்ணியமான தொழில் மற்றும் பொருளாதார அபிவிருத்தி மீதான நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 8, மற்றும் நிலைபேறான நகரங்கள் மீதான நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 11 ஆகியவற்றுடன் இணைத்தலும் வேண்டும்.

iv. துப்பரவேற்பாட்டுத் தொழிலின் முறைசார்த்தன்மை மற்றும் தொழில்சார்மயப்படுத்தல் போன்றவற்றுக்கான ஆதரவு தேடல்.

v. ஒழுங்கமைப்பதற்கு தொழிலாளர்களுக்கு ஊக்கமளிப்பதற்கும் ஒத்துழைப்பு வழங்குவதற்கும் நீண்ட கால கடப்பாடுகளை உருவாக்குதல்.

vi. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் தொழில் நிலைமைகள் மீதான தனியார்மயமாக்களின் தாக்கம் தொடர்பாக ஆய்வை நடாத்துதல்.

vii. கோவிட்-19 நிலைமையில் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் நிலைமை தொடர்பாக ஆய்வை நடாத்துதல்.

viii. சந்தையில் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் பங்குபற்றலை முன்னேற்றுவதற்கு திறன்கள் அபிவிருத்தியை ஊக்குவித்தல்.

ix. புத்தாக்கமானதும் சமூக ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெயர்களைக் கொண்டு துப்பரவேற்பாட்டுத் தொழிலுடன் தொடர்புடைய சமூக ரீதியாக தரங்குறையும் பெயர்களை மாற்றீடு செய்தல் (உதாரணம்: பிரேசிலில் "மீள்சுழற்சி செய்யக்கூடியவற்றை சேகரிப்போர்")

x. நிலைபேறுதன்மை மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு ஆகியவற்றின் தூதுவர்களாக துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களை நியமிப்பதுடன் பாடசாலைகள் போன்ற பொது இடங்களில் பேசுவதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.

xi. கூட்டமைப்புகளை உருவாக்குவதற்கு நீர் மற்றும் துப்பரவேற்பாடு, பொதுச் சுகாதாரம், மற்றும் உணவு முறைமை ஆகியவற்றுக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்துதல்.

xii. உப பிராந்திய மட்டத்தில் சிறந்த நடைமுறைகள் மீதான தகவல் மற்றும் அறிவுப் பகிர்தலை ஊக்குவித்தல்.

## முடிவுக் கூற்று

சர்வதேச மற்றும் பிராந்திய அரங்குகளில் பிரதிபலிப்பதற்கு துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் குரல்களை வலுப்படுத்துவதற்கான அடிப்படையாகச் செயற்படும், நாடுகளுக்கிடையில் தகவல்களை பரிமாறும் மற்றும் நாடு மட்டங்களில் அக்கறையுடைய தரப்பினர்களூடாக ஒத்துழைப்புகளை வழங்கும் சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனம், உலக சுகாதார அமைப்பு, உலக வங்கி, வோட்டர் எயிட், மற்றும் SNV உள்ளிட்ட சர்வதேச முகவர்கள் குழுவால் வழங்கப்படும் தற்போது தொடரும் சட்டக அல்லது வலையமைப்பு ஒத்துழைப்பை தொடர்ந்து கொண்டுசெல்வதற்கான அழைப்புடன் தெற்காசியாவுக்கான சர்வதேச தொழிலாளர் இஸ்தாபன WDT இன் பிரதிப் பணிப்பாளர் திரு சடோஸி சசாகி செயலமர்வை முடிவுக்குக் கொண்டுவந்தார். இப்பிரச்சினைகளை அபிவிருத்தி நோக்கில் பார்த்து, சுற்றாடல் நோக்கில் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் பங்கின் முக்கியத்துவத்தை கருத்திற்கொள்வது பயனுள்ளதாகக் காணப்பட்டது. இச்சுழற்சியை இல்லாதொழிற்பதற்கு, துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் பிள்ளைகள் இந்த இழுக்கினை பின்னுரிமையாகக் கொண்டுசெல்வதை நிறுத்துவதற்கானதொரு தேவை காணப்பட்டது. ஆகவே, இக்கலந்துரையாடலை தொழிலாளர் பிரச்சினைகளுக்கு மட்டும் வரையறுக்காது அடுத்த தலைமுறையினருக்கான கல்வி தொடர்பாகக் கவனம் செலுத்தி அவர்கள் மாற்றுத் தொழில்வாய்ப்புகளை அணுகுவதனை இயல்விக்கும் சுற்றாடலை வழங்குவது அவசியமாகக் காணப்பட்டது.

மூலோபாயமாக, இத்துறையிலுள்ள கண்ணியமான தொழிற் குறைபாடுகளை தீர்க்குமுகமாக குறுகிய கால நன்மைகளையும் நீண்ட காலத் தீர்வுகளையும் கவனத்திற்கொள்வது அவசியமாகக் காணப்பட்டது. குறுகிய கால நன்மைகளை வடிவமைத்தல் மற்றும் நீண்ட காலத் தீர்வுகளுக்கு பங்களிப்பு வழங்குதல் ஆகிய இரு விடயங்களையும் நிவர்த்திசெய்வதற்கான தேவையொன்று காணப்பட்டது. சமூகத்திலுள்ள துப்பரவேற்பாட்டுத் தொழில் தொடர்பான மனநிலை மற்றும் கண்ணோட்டம் ஆகியவற்றை மாற்றுவது மிகவும் கஸ்டமான ஒரு பகுதியாகக் காணப்பட்டதாக அவர் ஏற்றுக்கொண்டார். வரும் வருடங்களில் பங்கீடுபாடுடையவர்களுடன் சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனத்தின் தொடர்ச்சியான தொடர்பாடல் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துரையாடல்களை பிரதிபலிப்பதற்கும் நாடு மட்டத்தில் கொள்கைகளை வகுப்பதற்கும் உட்பட்டிருப்பதாகவும் கலந்துகொண்டோருக்கு அவர் உறுதியளித்தார்.

## பின்னிணைப்பு 1: உறுதிப்படுத்தப்பட்ட பெற்றுக்கொண்ட தகவல்கள்

**துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் பிரதான இடர்கள், இந்த இடர்களை நிவர்த்திசெய்வதில் கலந்துகொண்டோர் முகங்கொடுக்கும் பிரதான சவால்களும் சந்தர்ப்பங்களும்.**

i. தொழிலின் முறைசாரா மற்றும் நிச்சயமற்ற தன்மை.
ii. முறைசார் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கும் கூட மோசமான தொழில் நிலைமைகள், நிச்சயமற்ற தன்மை மற்றும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்துக்கான அணுகல் மற்றும் கூட்டுப் பேரம்பேசல் இல்லாமை.
iii. மோசமான தொழில் நிலைமைகள், நிச்சயமற்ற தன்மை மற்றும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்துக்கான அணுகல் மற்றும் கூட்டுப் பேரம்பேசல் இல்லாமை போன்றவற்றுக்கு சில வேளைகளில் இட்டுச்செல்லக்கூடிய வெளியாட்களிடம் பணியை ஒப்படைத்தல், வெளிப்புறமாக்கல் மற்றும் தனியார்மயமாக்கல்.
iv. தனிநபர் பாதுகாப்பு அங்கிகள் இல்லாமை.
v. உடல் காயங்கள் மற்றும் சுகயீன இடர்கள்.
vi. சமூகப் பாதுகாப்பு இல்லாமை.
vii. சமூக இழுக்கு மற்றும் புறக்கணிப்பு.
viii. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் தொழிலுக்கு அங்கீகாரம் இல்லாமை.
ix. குறித்த தேசிய சட்டக் கட்டமைப்புகள், உபதேசிய அரச மட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் இல்லாமை மற்றும் காணப்படுகின்றவற்றைக் கூட சமமற்ற முறையில் பிரயோகித்தல்.
x. தொழில்சார் பயிற்சிகள் மற்றும் இத்தொழிலுக்கான முறைசார் தொழிற் சந்தை ஆகியன இல்லாமை.
xi. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கான மாற்று ஜீவனோபாயம் இல்லாமை.
xii. ஊழியப்படையிலிருந்து துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் நீக்கம்.
xiii. உயர் வறுமை மற்றும் எழுத்தறிவின்மை நிகழ்வுகள்.
xiv. பால்நிலை மற்றும் புலம்பெயர் தகுதி நிலைகள் மற்றும் இன அல்லது சாதி போன்ற ஏனைய காரணிகளை அடிப்படையாகக் கொண்ட புறக்கணிப்புக்கு கவனம் செலுத்தாமை.
xv. தொழிற்சங்கமயமாக்கல் இல்லாமை.
xvi. பிரச்சினையின் உடைமை மற்றும் பொறுப்புக்கூறல் இல்லாமை.
xvii. துப்பரவேற்பாட்டு உட்கட்டுமானங்களில் முதலீடு இல்லாமை மற்றும் போதுமான பணியாட்டொகுதி, தனிநபர் பாதுகாப்பு அங்கிகள் மற்றும் OSH நிலைமைகள் போன்றவற்றுக்கான வளங்கள் இல்லாமை.
xviii. தலையீடுகளின் நிலைபெறுதன்மை.
xix. அறிவு இடைவெளி மற்றும் தரவுகள் இல்லாமை.

**இவ்வாறான இடர்களையும் சவால்களையும் நிவர்த்திசெய்வதற்கு அரசாங்கங்களும் சமூகப் பங்காளர்களும் எடுத்துள்ள நடவடிக்கைகள்.**

i. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் தேவைகள் மற்றும் ஆர்வங்கள் தொடர்பான அதிகரிக்கப்பட்ட விழிப்புணர்வு.
ii. அநேகமான நாடுகளில் பொதுவான தொழிற் சட்டங்கள் காணப்பட்டபோதிலும் மிகச் சிலதே துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கென்று குறித்ததாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
iii. அநேகமான நாடுகளில், துப்பரவேற்பாட்டுத் தொழில் தற்போதும் தேசிய தொழிற் சட்டங்களின் நோக்கெல்லைக்கு வெளியே அமைந்திருத்தல்.
iv. இத்துறையின் தனியார்மயப்படுத்தலுக்கு எதிராகப் போராடுவதற்கான முயற்சிகள் காணப்படுகின்றன.

v. கோவிட் - 19 உலகத்தொற்று நோய் சமூகத்துக்கு துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் பக்கத்தோற்றத்தை உயர்த்தியுள்ளது. (உதாரணம்: மியன்மாரில்)

vi. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கான கொள்கைகளை, குறிப்பாக ஆவணப்படுத்தப்படாத புலம்பெயர்ந்தோரை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக வகுப்பதற்கு சில நாடுகளில் (மாலைதீவுகள்) முயற்சிகள் காணப்படுகின்றன.

vii. உடலுழைப்பால் மேற்கொள்ளப்படும் சாக்கடைத் துப்பரவாளர்களை புனர்வாழ்வளிப்பதற்கான முயற்சிகள் காணப்படுகின்றன.

**இத்துறையில் சந்தர்ப்பங்களை உருவாக்குவதற்கும் இவ்வாறான சவால்களை நிவர்த்திசெய்வதற்கும் சர்வதேச தொழிலாளர் இஸ்தாபனம், அரசாங்கங்கள் மற்றும் சமூக பங்காளர்களால் தழுவக்கூடிய மூலோபாயங்கள்**

**இனங்காணப்பட்ட முன்னுரிமைப் பகுதிகள்**

i. தொழிலை பாரிய முறைசார்ந்ததாகவும் தொழில்வாண்மையானதுமாக ஆக்குதல்.

ii. தொழில் நிலைமைகளின் முன்னேற்றம்.

iii. திறன்கள் அபிவிருத்தி மற்றும் மீள் திறன்படுத்தல் மீதான முதலீடு.

iv. துப்பரவேற்பாட்டு உட்கட்டுமானம் மற்றும் கண்ணியமான நிலைமைகளில் போதுமான பணியாட்டொகுதி மீதான முதலீடு.

v. துப்பரவேற்பாட்டுத் துறை தொடர்பான தொழில்நுட்பங்கள் மீதான முதலீடு. (உதாரணம்: எந்திரவியல்)

vi. துப்பரவேற்பாட்டு பெருமதிச் சங்கிலியின் இயந்திரமயமாக்கல்.

vii. இத்துறையில் சமூகக் கலந்துரையாடலை உருவாக்குவதற்கு அரசாங்கங்களுடனும் சமூகப் பங்காளர்களுடனும் அதிக ஈடுபாடு.

viii. தொழிலிலுள்ள உரிமைகள், தேசிய தொழில் சட்டங்கள், மற்றும் OSH கொள்கைகள் மீதான பாரிய உணர்ச்சிப்படுத்தல் மற்றும் விழிப்புணர்வு அதிகரிப்புப் பிரச்சாரங்கள்.

ix. ஒவ்வொரு துப்பரவேற்பாட்டுத் தொழிலாளருக்கும் ஆதரவு விடயங்களை வழங்குவதற்கு உதவுவதற்கான அர்ப்பணிக்கப்பட்ட வெளிக்கள மூலோபாயங்கள்.

**சந்தர்ப்பங்களை உருவாக்குவதற்கும் சவால்களை நிவர்த்திசெய்வதற்குமான மூலோபாயங்கள்**

i. முக்கியமானதாக, அடிப்படை பொதுச் சேவையாக, நீர் வழங்கல் மற்றும் நீர் மேற்பார்வைக்கான முழுமையான ஒருங்கமைப்பாக துப்பரவேற்பாட்டுச் சேவைகளின் முழு உடைமையையும் பொறுப்பையும் எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கங்களை ஊக்குவித்தல். பொதுச் சுகாதாரம், நீர் வளங்கள் மற்றும் சுற்றாடல் அதேபோன்று பொருளாதாரம் ஆகியவற்றை பாதுகாப்பதற்கான முக்கியமான பொதுச் சேவையொன்றான முழு அங்கீகாரத்தை அரசாங்கங்கள் உறுதிப்படுத்துவதற்கு. (உதாரணம்: விவசாயம், சுற்றுலா போன்றன)

ii. அரசாங்கங்களும் தொழில் வழங்குனர்களும் தொழிலாளர்களுக்கு எவ்வித செலவுமின்றி தொழிலாளர்களுக்கு போதுமான தனிநபர் பாதுகாப்பு அங்கிகளை வழங்கி அவற்றை பராமரிப்புச் செய்வதற்கான ஆதரவு திரட்டல்.

iii. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களுக்கான கண்ணியமான தொழிலுக்காக ஆதரவு தேடுவதுடன் அவற்றை நீர் மற்றும் துப்பரவேற்பாடு மீதான நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 6, கண்ணியமான தொழில் மற்றும் பொருளாதார அபிவிருத்தி மீதான நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 8, மற்றும் நிலைபேறான நகரங்கள் மீதான நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 11 ஆகியவற்றுடன் இணைத்தல்.

iv. துப்பரவேற்பாட்டுத் தொழிலை முறைசார்ந்ததாக்குதல் மற்றும் தொழில்வாண்மையாக்குதல் போன்றவற்றுக்காக ஆதரவு தேடல்.

v. அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களையும் ஈடுபடுத்திய அனைத்து சமூக பங்காளர்களுடனான கலந்துரையாடலில் அறிமுகப்படுத்துவதற்கான குறித்த தேசிய மற்றும் உப தேசிய சட்டகங்கள் மற்றும் அரசியலமைப்பை உருவாக்குதல்.

vi. முறையான தொழில் உறவில் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்கள் காணப்படும் சந்தர்ப்பங்களிலும், கண்ணியமான தொழில் நிலைமைகளை அவர்கள் அணுகுவதை இயலச்செய்வதை உறுதிப்படுத்துதல்.

vii. தொழிலாளர்களுக்கான கண்ணியமான தொழில் நிலைமைகளுடன் அனைவரும் சமமான முறையில் அணுகக்கூடிய தரமான துப்பரவேற்பாட்டுச் சேவைகளை இயலச்செய்து

துப்பரவேற்பாடு மற்றும் நீர் உட்கட்டமைப்புகளில் போதுமான அளவு முதலீட்டினை மேற்கொள்ளல்.

viii. கூட்டாக ஒழுங்கமைத்து பேரம்பேசுவதற்காக தொழிலாளர்களை ஊக்கப்படுத்துவதற்கும் ஒத்துழைப்பு வழங்குவதற்குமான நீண்ட கால கடப்பாடுகளை உருவாக்குதல்.

ix. துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் தொழில் நிலைமைகள் மீதான தனியார்மயமாக்களின் தாக்கம் தொடர்பாக ஆய்வை நடாத்துதல்.

x. கோவிட்-19 நிலைமையில் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் நிலைமை தொடர்பாக ஆய்வை நடாத்துதல்.

xi. முறைசார் தொழிற் சந்தையில் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் பங்குபற்றலை இலகுபடுத்துவதற்கு முறைசார் திறன்கள் அபிவிருத்தி, கல்வி, மற்றும் தொழிற் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவித்தல்.

xii. புத்தாக்கமானதும் சமூக ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெயர்களைக் கொண்டு துப்பரவேற்பாட்டுத் தொழிலுடன் தொடர்புடைய சமூக ரீதியாக தரங்குறையும் பெயர்களை மாற்றீடு செய்தல் (உதாரணம்: கழிவுத் தொழிலாளர்களுக்காக பிரேசிலில் “மீள்சுழற்சி செய்யக்கூடியவற்றை சேகரிப்போர்” மற்றும் செனகளில் “சுற்றாடல் தொழில்நுட்பவியலாளர்கள்”)

xiii. நிலைபேறுதன்மை மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு ஆகியவற்றின் தூதுவர்களாக துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களை நியமிப்பதுடன் பாடசாலைகள் போன்ற பொது இடங்களில் பேசுவதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.

xiv. கூட்டமைப்புகளை உருவாக்குவதற்கு நீர் மற்றும் துப்பரவேற்பாடு, பொதுச் சுகாதாரம், மற்றும் உணவு முறைமை ஆகியவற்றுக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்துதல்.

xv. உப பிராந்திய மட்டத்தில் சிறந்த நடைமுறைகள் மீதான தகவல் மற்றும் அறிவுப் பகிர்தலை ஊக்குவித்தல்.

## பின்னிணைப்பு 2: கலந்துகொண்டோரின் பட்டியல்

| பெயர்கள் | தலைப்பு | பதவி | அமைப்பு |
|---|---|---|---|
| திரு முஹம்மது ஹுமயுன் கபீர் | இணைச்செயலாளர், ஊழியர் மற்றும் தொழில் அமைச்சு. | அரசாங்கப் பிரதிநிதி | பங்களாதேஸ் |
| திரு முஹம்மது கம்ருள் ஹசன் | பிரதிப் பரிசோதகர் நாயகம் (பாதுகாப்பு) | அரசாங்கப் பிரதிநிதி | பங்களாதேஸ் |
| திருமதி மரியம் அரீபா | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | அரசாங்கப் பிரதிநிதி | மாலைதீவு |
| திருமதி அனிமத் நஸ்மி பஸீல் | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | அரசாங்கப் பிரதிநிதி | மாலைதீவு |
| திரு சுஜான் ஜொஜிஜு | சிரேஸ்ட தொழிட்சாலைப் பரிசோதகர் | அரசாங்கப் பிரதிநிதி | நேபாளம் |
| திரு உமேஸ் யாதவ் | சிரேஸ்ட பிரதேசப் பொறியியலாளர் | அரசாங்கப் பிரதிநிதி | நேபாளம் |
| திருமதி ஸைஸ்டா குள் | சிரேஸ்ட அலுவலர், OPHRD அமைச்சு. | அரசாங்கப் பிரதிநிதி | பாகிஸ்தான் |
| திரு முஹம்மது ஹபீபுர் ரஹ்மான் | சிரேஸ்ட சட்ட அலுவலர், பங்களாதேஸ் தொழில்வழங்குனர் சம்மேளனம் | தொழில் வழங்குனர் பிரதிநிதி | பங்களாதேஸ் தொழில் வழங்குனர் சம்மேளனம் |
| திரு மஹபூர் ரஹ்மான் | சட்ட அலுவலர், பங்களாதேஸ் தொழில்வழங்குனர் சம்மேளனம் | தொழில் வழங்குனர் பிரதிநிதி | பங்களாதேஸ் தொழில் வழங்குனர் சம்மேளனம் |

| | | | |
|---|---|---|---|
| திருமதி நடேசா படேல் | பிரதான நிறைவேற்று அலுவலர் | தொழில் வழங்குனர் பிரதிநிதி | இந்திய துப்பரவேற்பாட்டுக் கூட்டணி, அனைத்து இந்திய தொழில் வழங்குனர் அமைப்பு (AIOE) |
| திரு அத்னான் ஹலீம் | செயலாளர் நாயகம், மாலைதீவு தொழில் வழங்குனர்களின் தேசிய சம்மேளனம். | தொழில் வழங்குனர் பிரதிநிதி | மாலைதீவு தொழில் வழங்குனர்களின் தேசிய சம்மேளனம் |
| திருமதி சாஹிதா மரியம் முஹம்மது | உதவித் தலைவர், மாலைதீவு தொழில் வழங்குனர்களின் தேசிய சம்மேளனம். | தொழில் வழங்குனர் பிரதிநிதி | மாலைதீவு தொழில் வழங்குனர்களின் தேசிய சம்மேளனம் |
| திரு ஹன்சா ராம் பாண்டே | நேபாள வணிக மற்றும் கைத்தொழிற் சங்கங்களின் சம்மேளனம் (FNCCI) | தொழில் வழங்குனர் பிரதிநிதி | நேபாள வணிக மற்றும் கைத்தொழிற் சங்கங்களின் சம்மேளனம் (FNCCI) |
| திரு சக்கி அஹ்மத் கான் | பாகிஸ்தான் தொழில் வழங்குனர்களின் சம்மேளனம் (EFP) | தொழில் வழங்குனர் பிரதிநிதி | பாகிஸ்தான் தொழில் வழங்குனர்களின் சம்மேளனம் (EFP) |
| திரு வஜிர எல்லேபொல | இலங்கை தொழில் வழங்குனர்களின் சம்மேளனம் (EFC) | தொழில் வழங்குனர் பிரதிநிதி | இலங்கை தொழில் வழங்குனர்களின் சம்மேளனம் (EFC) |
| முஹம்மது பஜ்லுர் ரஹ்மான் | டாக்கா WASA ஜடிஓடபதி ஊழியர்கள் ஒன்றியம் | தொழிலாளர் பிரதிநிதி | டாக்கா WASA ஜடிஓடபதி ஊழியர்கள் ஒன்றியம் |
| திரு ஜம்மு அனந்த் | தலைவர் | தொழிலாளர் பிரதிநிதி | நாக்பூர் மாநகர கூட்டுத்தாபன ஊழியர்கள் ஒன்றியம் |
| திருமதி ரீமா நானாவதி | SEWA இந்தியா | தொழிலாளர் பிரதிநிதி | SEWA இந்தியா |
| திரு மணலிபன் சாஹ் | உதவித் தலைவர், SEWA இந்தியா | தொழிலாளர் பிரதிநிதி | SEWA இந்தியா |
| திரு ஆதில் சரீப் | செயலாளர் நாயகம் | தொழிலாளர் பிரதிநிதி | இந்திய தேசிய மாநகர மற்றும் உள்ளூராட்சி சபைகள் தொழிலாளர்கள் சம்மேளனம் |
| திரு ராம் பிரசாத் பவுடேல் | உள்ளூர் மட்ட ஊழியர்கள் ஒன்றியம் | தொழிலாளர் பிரதிநிதி | உள்ளூர் மட்ட ஊழியர்கள் ஒன்றியம் |
| திரு நார் பகதுர் சாஹ் | தலைவர் | தொழிலாளர் பிரதிநிதி | உள்ளூர் மட்ட ஊழியர்கள் ஒன்றியம் |
| திரு அப்துல் ரஹ்மான் ஆசி | தலைவர் | தொழிலாளர் பிரதிநிதி | பாகிஸ்தான் பொதுத்துறை ஊழியர்கள் சம்மேளனம் |

| | | | |
|---|---|---|---|
| திரு ரசீத் கான் | அதிகாரசபைகள் ஊழியர் சம்மேளனம், பாகிஸ்தான். | தொழிலாளர் பிரதிநிதி | அதிகாரசபைகள் ஊழியர் சம்மேளனம், பாகிஸ்தான். |
| திரு டேவிட் போய்ஸ் | பிரதிச் செயலாளர் நாயகம் | தொழிலாளர் பிரதிநிதி | பொதுச் சேவைகள் சர்வதேசம் |
| திரு கண்ணன் ராமன் | தெற்காசியாவுக்கான உப பிராந்திய செயலாளர் | தொழிலாளர் பிரதிநிதி | பொதுச் சேவைகள் சர்வதேசம் |
| திரு கோட்சன் முஹண்டொஸ் | பிரச்சார உருங்கிணைப்பாளர் | தொழிலாளர் பிரதிநிதி | பொதுச் சேவைகள் சர்வதேசம் |
| திருமதி டாரியா கிப்ராரியொ | உள்ளூர் மற்றும் பிராந்திய அரசாங்க அலுவலர் | தொழிலாளர் பிரதிநிதி | பொதுச் சேவைகள் சர்வதேசம் |
| திருமதி சோனியா மாரியா டயஸ் | கழிவு நிபுணர் | தொழிலாளர் பிரதிநிதி | முறைசாரா தொழிலில் பெண்கள்: உலகமயமாதல் மற்றும் ஒழுங்கமைத்தல் (WIEGO) |
| திரு கபிர் அரோரா | முறைசாரா தொழிலில் பெண்கள்: உலகமயமாதல் மற்றும் ஒழுங்கமைத்தல் (WIEGO) | தொழிலாளர் பிரதிநிதி | முறைசாரா தொழிலில் பெண்கள்: உலகமயமாதல் மற்றும் ஒழுங்கமைத்தல் (WIEGO) |
| திரு ரஜீவ் முனன்கமி | பன்னாட்டு நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர், நகர துப்பரவேற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | சர்வதேச அமைப்பு | நெதர்லாந்து அபிவிருத்தி அமைப்பு. (SNV) |
| திரு அண்ரெஸ் ஹியுசோ | துப்பரவேற்பாட்டு சிரேஸ்ட கொள்கைப் பகுப்பாய்வாளர் | சர்வதேச அமைப்பு | வோட்டர் எயிட் |
| திருமதி கனிகா சிங் | கொள்கை அலுவலர் | சர்வதேச அமைப்பு | வோட்டர் எயிட் |
| திருமதி ருத் கென்னடி-வோக்கர் | நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டு நிபுணர் | சர்வதேச அமைப்பு | உலக வங்கி |
| திருமதி அலீட் வேன் லியுர் | துறைசார் கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர், ILO | செயலகம் | ILO - ஜெனீவா |
| திருமதி டக்மார் வோட்டர் | கண்ணியமான தொழிற் குழுவின் பணிப்பாளர் | செயலகம் | ILO - புது டில்லி |
| திரு சடோஸி சசாகி | கண்ணியமான தொழிற் குழுவின் பிரதிப் பணிப்பாளர் | செயலகம் | ILO - புது டில்லி |
| திரு ஒளிவர் லியங் | தலைவர், பொது மற்றும் தனியார் சேவைகள் அலகு | செயலகம் | ILO - ஜெனீவா |
| திரு கார்லஸ் ஆர். கெரியோன்-கிரெஸ்போ | துறை நிபுணர் | செயலகம் | ILO - ஜெனீவா |

| | | | |
|---|---|---|---|
| திரு டேவிட் காப்பியா | துறை நிபுணர் | செயலகம் | ILO - ஜெனீவா |
| திரு தாஹிர் முஹம்மது | துறை ஒருங்கிணைப்பாளர் | செயலகம் | ILO - ஜெனீவா |
| திரு சுல்தான் அஹ்மது | வசதியளிப்பவர் | செயலகம் | ILO - புது டில்லி |
| திரு ரவீந்திர பீரிஸ் | வசதியளிப்பவர் | செயலகம் | ILO- புது டில்லி |
| திரு சஹாபுத்தீன் கான் | வசதியளிப்பவர் | செயலகம் | ILO- புது டில்லி |
| திருமதி திவ்யா வேர்மா | வசதியளிப்பவர் | செயலகம் | ILO- புது டில்லி |
| திரு பாலசிங்கம் இஸ்கந்தகுமார் | வசதியளிப்பவர் | செயலகம் | ILO- கொழும்பு |
| திரு அஸ்மி முஸ்தபா | வசதியளிப்பவர் | செயலகம் | ILO- கொழும்பு |
| திரு சுஜான் ஜொஜிஜு | வசதியளிப்பவர் | செயலகம் | ILO- காத்மண்டு |
| திரு ராசி முஜ்தபா ஹைதர் | வசதியளிப்பவர் | செயலகம் | ILO- இஸ்லாமபாத் |
| திரு சுயோசி கவகாமி | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிபுணர் | செயலகம் | ILO- புது டில்லி |
| திரு இன்சாப் நிஸாம் | நிபுணர், தொழிலில் அடிப்படைக் கொள்கைகள் மற்றும் உரிமைகள் | செயலகம் | ILO- புது டில்லி |